# திருவுகோல்

2053 பங்குனி

மாத இதழ்

வெளியீடு

மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு சேல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# பட்டினப்பாலை காட்டும் சோழ நாட்டின் செழுமை



இளவரசி இளங்கோவன்

திறவுகோல் வாசகர்களுக்கு அன்பின் வணக்கங்கள். கடந்த இதழில் குறிப்பிட்டிருந்ததை போல காவேரிப்பூம்பட்டினத்தின் கட்டமைப்பு, தெருக்கள், வீடுகள் எப்படி அமைக்கப்பட்டிருந்தன என்பதை விளக்கும் பட்டினப்பாலை நகர சிறப்புக்குள் நுழைவதற்கு முன் அங்கு வாழ்ந்த மக்களின் வளத்தை குறிக்கும் பின்வரும் அடிகளையும் இந்த மாத இதழில் காண்போம்.

அனகர் வியன்முற்றத்துச்
சுடர்நுதல் மடநோக்கின்
நேரிழை மகளிர் உணங்குணாக் கவரும்
கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை
பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டும்
முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்
விலங்குபகை யல்லது கலங்குபகை யறியாக்
கொழும்பல்குடிச் செழும்பாக்கத்துக்
குறும்பல்லூர் நெடுஞ்சோணாட்டு (20-28)

முற்றத்தில் உணவு தானியங்களை பெரிய இல்லத்தின் முற்றத்தில், ஒளியுடைய நெற்றியையும் மடப்பமுடைய நோக்கினையும் உடைய, பொருந்திய அணிகளை அணிந்த பெண்கள் காயவைத்துக் கொண்டிருப்பர்.

காயும் உணவுப்பொருள்களைக் கவர்ந்து உண்ணும் கோழிகளை, அவர்களுடைய வளைந்த கீழ்ப்பகுதியுடைய கனமான காதணிகளை கழற்றி எறிந்து மகளிர் விரட்டி அடிப்பர்.

அப்படி வீசப்படும் மதிப்புமிக்க குழைகள் அங்கே விளையாடி கொண்டிருக்கும் பொன்னினால் செய்த சிலம்பினைக் காலில் அணிந்த சிறுவர்கள் குதிரை இல்லாமல் ஓட்டும் மூன்று உருளைகளையுடைய சிறிய தேரின் வழியைத் தடுக்கும். கள்ளம் கபடமற்ற பிள்ளைகள் தங்களுக்கு ஏற்பட்ட தடையையோ, குழையின் மதிப்பையோ பொருட்படுத்தாமல் தம் தேர் வண்டியை (முக்கால் சிறுதேர்) உருட்டிச் செல்வர்.

இவ்வாறு சோழ வள நாட்டில் பயிர்களை உண்ணும் பறவைகள் மற்றும் விலங்கு பகை என இந்த சிறு பகை தவிர்த்து வேறு மனம் கலங்கும் உட்பகை, வேற்றுநாட்டுப் பகை

என பெரும் பகை இல்லாத சிறப்புமிக்க காவிரிப்பூம்பட்டினம் என்கிறது பட்டினப்பாலை. செல்வத்தில் கொழிக்கும் வளமிக்க செல்வக் குடிகள் ,வளமான செல்வந்தர்கள் வாழும் செழுமையான சிற்றூர்கள் பலவற்றைக் கொண்டது சோழநாடு என படம்பிடித்து காட்டுகிறது பட்டினப்பாலை.

வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி,
நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி
பணை நிலைப் புரவியின் அணை முதல் பிணிக்கும்,
கழி சூழ் படப்பை கலியாணர்ப்
பொழில் புறவின் பூந்தண்டலை, (29-33)

பூம்புகார் முதற்கால சோழர்களின் முக்கிய துறைமுக நகரமாக விளங்கியது. காவிரிப்பூம்பட்டினம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மிகப்பெரிய துறைமுக நகரமாக விளங்கியதால் பட்டினம் என்ற சொல் சிறப்பாக பூம்புகாரையே குறிக்கும்.

காவிரிப்பூம்பட்டினத்தில் கடல்வணிகம் மட்டுமல்லாமல் நிலவாணிகமும் சிறப்பாக நடைபெற்றதை மேற்கண்ட வரிகளின் மூலம் உணரலாம். மிகப்பெரிய சோழநாட்டில் இருக்கின்ற பல ஊர்களுக்கும் சென்று வெண்மை நிறத்தில் உள்ள உப்பை விலை கூறி வியாபாரிகள் கொடுப்பார்கள்.

அந்த உப்பிற்கு பதிலாக நெல்லை பண்டமாற்றம் செய்வார்கள். அப்படி பண்டமாற்றம் செய்த நெல்லைப் பெற்று வந்த வலிமை வாய்ந்த படகுகளைப்,பந்தியில் (குதிரைச்சாலையில்) குதிரைகளைக் கட்டுத்தறியில் கட்டியிருப்பது போல உப்பங்கழி சார்ந்த இடங்களின் முன்பகுதியில் கட்டியிருப்பர்.

இத்தகைய உப்பங்கழிகள் சூழ்ந்த தோட்டங்களும், மகிழ்ச்சியான புது வருவாயினைத் தருகின்ற மரங்கள் நிறைந்த தோப்புகளும், அவற்றின் பக்கத்திலே பூஞ்சோலைகளையும் உடையது காவிரிப்பூம்பட்டினம்.

மழை நீங்கிய மா விசும்பில்,
மதி சேர்ந்த மக வெண்மீன்,
உருகெழு திறல் உயர் கோட்டத்து,
முருகு அமர் பூ முரண் கிடக்கை,
வரி அணி சுடர் வான் பொய்கை,
இரு காமத்து இணை ஏரி (34 - 39)

மேகம் இல்லாத மழை பெய்து ஓய்ந்த அகன்ற வானில் சந்திரனைச் சேர்ந்திருக்கும் மகம் என்ற வெண்ணிற நட்சத்திரத்தினைப் போன்ற வடிவமும் நிறமும் வலிமையும் வாய்ந்த உயர்ந்த கோயிலையும் அதனைச் சார்ந்து பல வண்ண மலர்களும் ஒருங்கே பூத்துக்கிடக்கும் நிறமும் அழகும் நிறைந்து ஒளி வீசும் உயர்ந்த கரையினையுடைய பொய்கையினையும் இம்மையிலும் மறுமையிலும் இன்பம் வேண்டுவோர் மூழ்கிக் குளிக்கும் இரண்டு ஏரிகளையும் உடையது காவிரிப்பூம்பட்டினம்.

சரி இன்று வெளிநாடுகளில் இருக்கும் வீடுகளையும் , கட்டங்களையும் பார்த்து பிரமித்து படம்பிடிக்கும் நமது மக்களுக்கு நமது முன்னோர்களின் கட்டிடக்கலை பற்றி பட்டினப்பாலை சொல்வதைப் பார்க்கலாம் வாருங்கள்.

புலிப் பொறி போர்க் கதவின்,
திருத்துஞ்சும் திண் காப்பின்,
புகழ் நிலைஇய, மொழி வளர,
அறம் நிலைஇய, அகன் அட்டில்
சோறு வாக்கிய கொழுங்கஞ்சி,
யாறு போலப் பரந்து ஒழுகி,
ஏறு பொரச் சேறு ஆகி,
தேர் ஓடத் துகள் கெழுமி
நீறு ஆடிய களிறு போல,
வேறுபட்ட வினை ஓவத்து
வெண் கோயில் மாசு ஊட்டும். (40 – 50)

இது இக்கால அமெரிக்கத் தலைவரின் ஆட்சி-மாளிகை White House
என்றழைக்கப்படும் வெள்ளை-மாளிகை
போல அக்காலத்தில் திருமாவளவனின் அரண்மனை வெண்கோயில் எனப் போற்றப்பட்டது.

காவிரிப்பூம்பட்டினத்தின் புகழ் நிலைப்பதற்கும், சோழ நாட்டினைப் பற்றிய புகழ் மொழி எங்கும் பரவி வளர்வதற்கும், அரசனின் வெள்ளை-மாளிகையின் கதவில் புலிச்சின்னம் பொறிக்கப்பட்டு, செல்வம் தங்குகின்ற இரட்டைக் கதவுகளைக் கொண்டதாக வலிமையான பாதுகாவலோடு அகன்ற அட்டிற் சாலைகள் அமைந்திருந்தன.

தமிழ்மொழி நிலைபெற்ற புகழ் உடையது. அது மேலும் வளர்வதற்காக அறச்சாலை அமைக்கப்பட்டிருந்தது.அங்கே மொழி வளரப் பாடுபடுவோருக்கு உணவு வழங்கப்படும்.

அறச்சாலையிலுள்ள சமையலறையில் சோற்றினைச் சமைத்து வடித்த கஞ்சியானது,

ஆறு போலப் பரந்து காவிரிப்பூம்பட்டனத்துத் தெருக்களில் ஓட, அங்கே காளைகள் ஒன்றொடொன்று சண்டையிட சோற்றுக் கஞ்சி சேறானது.

அச்சேற்றின் மீது தேர்கள் ஓட , சேறு புழுதியாகி எங்கும் பரவியது. அப்புழுதி படிந்ததால், பல்வேறு வண்ணங்களால் வேலைப்பாடமைய ஓவியம் தீட்டப்பட்டு வெண்ணிறமாக இருந்த அரண்மனை, புழுதியினைத் தன் மேல் வாரி இறைத்துக் கொண்ட யானையைப் போல் மாசு படிந்து காட்சியளித்தது.

என்ன பிரமிப்பாக உள்ளதா? மிகைப்படுத்தப்பட்ட து போல உள்ளதா? வரலாற்றை உற்று நோக்கினால் , அவ்வளவு ஏன் தஞ்சை பெரிய கோவிலை பற்றி ஆழ்ந்து வாசித்தாலே இதில் உள்ள உண்மைகள் விளங்கும் .

நிச்சயமாக அடுத்த இதழில் பட்டினப்பாலை விளக்கும் நகர சிறப்புக்குள் காவேரிப்பூம்பட்டினத்தின் கட்டமைப்பு , தெருக்கள் , வீடுகள் எப்படி அமைக்கப்பட்டிருந்தன என்பதை பற்றிய சேகரிப்புகளோடு உங்களை சந்திக்கிறேன். தங்களுடைய நேரத்திற்கும் வாசிப்பிற்கும் நெஞ்சம் கனிந்த நன்றிகள்.

–

**இளவரசி இளங்கோவன் (கனடா),**
பரவாக்கோட்டை.

---

## தன் கண்ணீரை

பசையாக்கிக் கொள்கிறது
நின்று எரியும் மெழுகுவர்த்தி.

நிறமற்ற நீருக்கு
நிறத்தைத் தந்தருளுகிறது
மண்.

குச்சிகளெல்லாம்
எரிந்ததும் அனாதையாகிறது
தீப்பெட்டி.

என்னை நான் மறந்த நாளில்
அவளின் திருமுகத்தை
பரிசளித்துப் போகிறாள்.

நகராத வெளிச்சத்திலிருந்து
விலகுவதில்லை அசையாத
பொருளின் நிழல் பிம்பங்கள்.

பகுத்தறியும் மனிதனைத் தவிர
எந்த இனமும் அதுவதன்
இனத்தை வதைப்பதில்லை.

என் வலி
உன் வலியாய் ஆகும் நாளில்
இன்னும் கூடுகிறது என் வலி.

தன்னிடமுள்ள கடைசி சொட்டு
நீரையும் மழையாகவே தருகிறது
மேகங்கள்.

சபைக்கு வந்தவர்களெல்லாம்
சொல்லெடுத்துப்போக; நான் பேசும்
நேரத்தில் சொற்களின்றி தவிக்கிறேன்.

எல்லையில்லா வானத்தை
தன்கட்டுக்குள் வைத்திருக்கிறது.
ஒற்றைப் பனித்துளி.

உதிரும் உன் மூச்சை
சுவாசிப்பதுபோல்; சிதறும் உன்
சிரிப்பைச் சேமித்துக் கொள்கிறேன்.

நான் சொல்ல மறந்தது
போலவே; நீயும் கேட்க
மறந்திருக்கலாம்.

வனம் தேடும்
பறவைக்கு வழிச்சொல்கிறது
வானம்.

வண்டுகள் தந்த
முத்தங்களால் பூக்களில்
எச்சில் ஈரம்.

எதையும் சுலபமாய் நம்பிவிடும்
தன்னலமற்ற மனம்தான்
அனைத்திலும் ஏமாற வழிசெய்கிறது.

எப்போதும் போல்
என்னைச் சேதப்படுத்துகிறாய்
வழக்கம் போல் சரியாகிக்
கொள்கிறேன்.

கருவறைக்குள்
தாய் தந்த காற்று கல்லறைக்குப்
போகும் வரை இருக்கும்.

இராத்திரி வேளையில்...
தவழ்ந்து வரும் மேகங்கள்; நிலவுக்கு
றெக்கைகள் கொடுக்கின்றன.

அந்தப் பூவின் சிரிப்பை
கடைசியாய்ப் பார்த்தவர்களில்
நான் ஒருவன்.

காரணம் தெரியவில்லை.
வழக்கமாய் இந்த மரத்தடியில்தான்
அடிக்கடி இளைப்பாறுகிறேன் நான்.

பத்து பிறைகள் முதுகில் பதிய
ஆறத்தழுவுகிறாய்; முத்து முத்தாய்
வடிகிறது என் முதுகில் ரத்தப்பால்.

நிழல் சுருங்கிப் புள்ளியாகும்
உச்சியில் வியப்புக்குறியாகிறது
எல்லாமும்.

பூவுக்குள் தேனை வைத்தவனே
அதற்கு வாசத்தையும்
தந்திருக்கவேண்டும்.

மலருக்கும் தெரிகிறது
இடத்திற்கேற்ப
ம(ன)ணம் மாற.

கருவறையில் கடவுள்
பக்கத்தில் அர்ச்சகர்
தொலைவில் பக்தன்.

பிறைநிலா
நிறைபெண்

அழகியமுற்றம்.

மெல்ல பேசுங்கள்
அவள் காதோரத்தில்
ஒற்றைரோஜா.

விபத்தில் 108
விரைகிறது
மற்றொரு 108.

கண்ணில் தூசு
நகக்கண்ணில் பிசிறு
உறுத்தும் வலி.

உயர பறக்கும்பறவை
கீழே கடல்
நெடுந்தூரப்பயணம்.

கழற்றப்பார்க்கிறேன்
விட்டுப் பிரிய மறுக்கிறது
போலிமுகம்.

கூழும்,களியும்
வறுமையில் தாத்தா
அதையே நான் நோயில்.

தாய்க்குப் பிரசவம்
விடுதலையானது
குழந்தை.

என்னிடம் சரியாய்
நீயும் தா
உன்னைச் சரியாய்.

பிரித்தெடுக்கப்பட்ட
பதர்
உபயம் காற்று.

குருதிச்சோறு
தின்னும் மண்
ஆடு பலி.

உள் நுழைந்தது கடல்
மண்ணை அழுத்தும்
பாரம்.

கல்லடி
நிச்சயம்
காய்த்தமரம்.

நான் எனது
நாமாகும் நாளில்
நலமுடன் எல்லோரும்.

நேற்று இல்லை
இன்று இருக்கு நாளை
இருந்தால் பார்க்கலாம்.

எனக்கு ஒன்று போனால்
எதிரிக்கு ரெண்டு வேண்டும்
குரோத மனசு.

– பாரியன்பன் நாகராஜன்
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353



## ஒளிமயம்

குடல்புண் குணமாக
என்று சொல்லாமல்
நன்றாக செரிமானம் ஆவதற்கு என்று
கூறி பாட்டிக்கு 'ஜெலுசில்' டானிக்கை
அப்போது தாத்தா வாங்கித் தருவார்

பாட்டி
குடித்து முடித்த பின்பு கிடைத்த
காலி கண்ணாடி பாட்டில் ஒன்றில் தான்
தாத்தா அந்த
மண்ணெண்ணெய் விளக்கை
வடிவமைத்தார்

மூடியில் ஊசியால்
ஓட்டைப் போட்டு
திரியை அதன் வழியாக
பாட்டிலின் அடி வரை திணித்து
ரேசனில் வாங்கிய
மண்ணெண்ணெயையும்
நிரப்பினார்

இரவுநேரங்களில் படிக்க
அது அப்போது
உறுதுணையாக இருந்தது

அப்போதைய
மண்ணெண்ணெய் விளக்கில்
நிமிர்ந்து எரிந்தது தீ
ஆனால் இப்போதோ
மேஜை விளக்குகள்
தலைகுனிந்தே
ஒளியை உமிழ்கின்றன

இப்போது
கண்ணாடி பாட்டில்களில்
டானிக் கூட வருவதில்லை
எல்லாம் நெகிழி மயம்.

– மு. ஆறுமுகவிக்னேஷ்,
சத்திரப்பட்டி,
விருதுநகர் மாவட்டம்.

---

## மானுடம் வெல்லும் – பிரபஞ்சன்




16ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரெஞ்சின் ஆதிக்கத்தில் முக்கிய துறைமுக நகரமாக இருந்தவந்தபுதுச்சேரி(பாண்டிச்சேரி) யை களமாகவும் அன்றைய நாளில் அதன் அருகாமையில் தனியரசாக இருந்து வந்ததஞ்சை, திருச்சியையும் இணைத்து. அரசியல் சூழல், மக்களின் நிலை, வாழ்வியல், மராட்டியர், நவாப்களின்தமிழக படையெடுப்பு எனப் பல பரிமானங்களை அன்றைய பிரெஞ்ச் அரசின் துபாசாக இருந்த ஆனந்தரெங்குபிள்ளையின் கையேடு குறிப்பை அடிப்படையாகக் கொண்டு புனையப்பட்ட வரலாற்றுப் புனைவு ஐயா பிரபஞ்சனின் ‘மானுடம் வெல்லும்’.

பிரெஞ்ச் மன்னரால் குவானராக (ஆளுநர்) நியமிக்கப்பட்டு புதுச்சேரி வரும் ‘துரை துய்மா’ ஐந்தாண்டுகள்புதுச்சேரியின் குவானராக இருக்கிறார். இவர் பணியாற்றிய இந்த ஐந்தாண்டுகளையே இந்த நூல்விவரிக்கிறது.

தலைமை துபாஷ் கனகராய முதலியார் மற்றும் துணை துபாஷ் ஆனந்தரெங்கு பிள்ளை இவர்களைக் கொண்டு மிகச் சிறப்பாக குவானர் துய்மா ஆட்சிப் புரிந்துள்ளார், அவற்றில் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

›› கடலோரமாகவோ சாலையோரமாகவோ அல்லது பொது இடங்களில் மலம் கழிக்கக்கூடாது. மீறி செய்பவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. அபராதத்தில் பாதி பிடுத்துக் கொடுப்பவர்களுக்கு கொடுக்கப்படுகிறது.
›› திருடுவது குற்றம் கசையடியும் அபராதமும் உண்டு, திருட்டு என்பது பெரிய திருட்டு மட்டுமல்ல சின்னக் கோழித் திருட்டுக் கூட (ஒரு கோழித் திருட்டு விசாரணையைக் காட்சி படுத்தியிருப்பார் ஆசிரியர் வெகுபிரமாதம்).
›› பெண் மீது தாவறாக நடந்துக்கொண்டால் (அவள் தாசியாகவே இருந்தாலும் அவள் விருப்பம் இல்லாமல்தீண்டக்கூடாது என்று குவானர் துய்மா கூறும் இடம் சிறப்பு) காதை அறுத்து ஊரைவிட்டு துரத்தி அடிப்பதுஅவன் பிரெஞ்சி படைவீரனாகவே இருந்தாலும் அதே தண்டனை தான்.

அன்றைய காலகட்டத்தில் தாசிகள் இருந்ததை நாம் அறிவோம். அவர்களின் நிலை துன்பத்துயரங்களைகோகிலாம்பாள் என்ற தாசிப்பெண் வாயிலாக புதுச்சேரியில் இருந்து தஞ்சை, தஞ்சையில் இருந்து திருச்சிவரை கடத்திய விதத்தில் அவர்களின் வலிமிகுந்த உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளார் ஆசிரியர். அதேபோலஅடிமைகள் ஏலம் என்பதும் வேதனைக்குள்ளான ஒன்றாக இருந்துள்ளது. நான்கு பணத்துக்கு தகப்பன் மூனுபணத்துக்கு தாய் இரண்டு பணத்துக்கு பிள்ளை என ஏலம் போட! இங்கும் இப்படியான நிலை இருந்துள்ளதுஎன்பது வேதனை.

அந்தக் காலக்கட்டத்தில் தஞ்சையை ஆண்டு வந்த மராட்டிய வம்சாவழியின் ஒரு பிரிவினர் தன் நாட்டு படைத் தலைவனுக்கே பணத்தை கொடுத்து, மகன் அரசனான தந்தையைக் கொள்வதும், அரசனாக இருக்கும் அண்ணனை தம்பிக்கொள்வதும் என மாறி மாறி ஆட்சி நடக்க, வரும் மன்னனும் மது மாது என கிரங்கி கிடக்க, பணத்துக்கு சொந்த நாட்டிலே கொள்ளையடிப்பதும் ஆட்சி சீர்கெட்டு நடக்கிறது. இந்த நிலையில் தஞ்சையின் அடுத்த அரச வாரிசு ‘சாயாஜி’ தான் அரசனாக குவானர் துய்மா உதவினால் தஞ்சை அரசுக்கு உட்பட்ட காரைக்கால் மற்றும் அதன் சுத்துப்பட்டு கிராமங்களைப் புதுச்சேரி அரசுக்கு எழுதிக் கொடுப்பதாக வாக்கு கொடுக்கிறான். ஆனால் அரசன் ஆன பிறகு அதை செய்யவில்லை.

ராணி மங்கமாவை வஞ்சகமாக வீழ்த்தி திருச்சி அரசை கைப்பற்றிய ஆர்காடு நவாப்

மருமகன் சந்தா சாக்கிப்திருச்சியின் அரசனாகிறான். காரைக்கால் விவகராம் அறிந்து காரைக்காலை கைப்பற்றி குவானர் துய்மாவுக்குபரிசாக கொடுக்கிறான் சந்தா சாகிப் (இந்த காலக்கட்டதில் தான் காரைக்கால் புதுச்சேரியோடு இணைக்கப்பட்டுள்ளது). இதன் மூலம் துயிமா, சந்தா சாகிப் நண்பர்கள் ஆகிறார்கள்.

இதை ஏற்கமுடியாத தஞ்சை மராடியன் வடக்கே ஆண்டு வந்த மராட்டிய போன்ஸ்லே அரசனுக்கு சந்தா சாகிப்மேல் போர் தொடுக்க அழைப்பு விடுக்கிறான். திருச்சிக் கோட்டையை முற்றுகை இடுகிறது மராட்டியப் படை. இதனால் சந்தா சாகிப் தன் மனைவி ஆத்தரிடம் கோட்டையில் உள்ள அனைத்து செல்வங்களையும் கொடுத்து ரகசிய வழியாகப் புதுச்சேரிக்கு அனுப்பி விடுகிறான். ஒருமாத முற்றுகைக்குப் பிறகு கோட்டைக்கைப்பற்றப்பட்டு சந்தா சாகிப் கைது செய்யப்படுகிறான்.

சந்தா சாகிப் மனைவி ஆத்தர் புதுச்சேரி தப்பிவிட்டதை அறிந்த மராட்டிய படைத் தலைவன் ராகுஜி பல முறைகுவானர் துய்மா விடம் கேட்டும். எங்களை நம்பி வந்தவர்களை வஞ்சிக்க முடியாது நட்புக்குத் துரோகம் செய்யஇயலாது என குவானர் துய்மா திட்டவட்டமாக மராட்டிய படைதலைவனிடம் கூறிவிடுகிறார்.

தன் ஆதிக்கத்துக்கு உட்பட்ட பகுதி என்றில்லாமல் தான் ஆட்சி செய்யும் பகுதி சிறப்பாக இருக்கவேண்டும்என்ற பரந்த உள்ளத்தோடு நேர்மையான ஒரு ஆட்சியை கொடுத்துவிட்டு செல்கிறார், செல்லும் முன் அவரதுதுபாஷ்களிடம் குவானர் துய்மா கூறுவது போல ஆசரியர் கூறுகிறார் அவை,

"இந்தக் கடல் அலையின் சப்தங்களில் ஏதோ சொல்லில் விளங்க வைக்க முடியாத இசை கலந்திருக்கிறது. அந்த இசை பரமார்த்திக இசையாய் எனக்குப் படுகிறது. இந்த மண் ஏராளமான ரகசியங்களைப் புதைத்துவைத்திருக்கும் குகை போல் எனக்குப் படுகிறது. அந்த ரகசியங்களை அறிந்துக்கொள்ள நான் முயன்றேன். இந்த மண்ணின் தாதுக்கள் வெறும் பௌதிகமானவை அல்ல. பல்லாயிரம் ஆண்டுக்கால மௌனங்களின் மொத்த சங்கமமாக இது விளங்குகிறது. மௌனங்கள் மிகுந்த சப்தம் கொண்டவை என்பதைத் தாங்கள்அறிவீர்கள் அல்லவா? பேச்சைக் காட்டிலும் மௌனம், அதிக வீரியமும் அர்த்தமும் கொண்டது என்பதைத்தாங்கள் அறிவீர்கள் தானே? அப்படிப்பட்ட பேச்சுக்கள் இந்த மண்ணின் ஒவ்வொரு பிடி மண்ணிலும் ஒளிந்துகொண்டிருப்பதாகவே எனக்குப் படுகிறது. என்ன செய்வது? இவை களுக்கெல்லாம் ஒரு முழு வாழ்வு காணாது! சில ஆண்டுகள் வந்து போகும் நான் என்ன அறியக் கூடும்?"

நம்மை அடிமை படித்தினாலும் அவனும் மனிதன் தானே! அவனிடமும் நல்ல பண்புகளும் இருக்கதானே செய்கிறது. நாமும் அப்படி தானே சொந்த ஊரை விட்டு வேறு இடத்துக்கு, ஏன் கடல் கடந்த கூட செல்கிறோம்அங்கேயே தங்கியும் விடுகிறோம்

அந்த பகுதியை நேசிக்க தொடங்கிவிடுகிறோம். சில காலம் கழிந்து நம்சொந்த ஊர் திரும்பும் போது எவ்வளவு ஆசை இருக்குமோ! அதே அளவு வருத்தம் இந்த மண்ணை விட்டுசெல்லும் போது இருக்கத்தானே செய்கிறது.

ஆகச் சிறந்த ஒரு நேர்மையான வரலாற்றுப் படைப்பு அவசியம் வாசியுங்கள் நன்றி.

**மனோ குணசேகரன்,**
புள்ளவராயன் குடிக்காடு,
மன்னார்குடி.

---

## குப்பைகளை இங்கே கொட்டாதீர்

விடிந்தும் விடியாததுமாய் அள்ளிய பல
வண்ணத் தூரிகை கட்டைகளுடன்
தொடங்குகிறது பணி...!

போகும் பாதையெல்லாம்
புரிந்தும் புரியாமல்
புன்னகைக்கப்படுகிறது
இவன் கைவண்ணங்கள்...!

கொடுத்த கருத்தினை சரியாக
உள்வாங்கி கருப்பும் வெள்ளையுமாய்
விளையாடுகிறது விரல் சுவற்றில்....!

வேலையின் தொடக்கத்தில் கொஞ்சம்
தேநீர்
அதற்கு இணைப்பாக பலசுவையில்
பாக்கெட் ரொட்டிகள்
வடையானது போண்டாவனுது சுருட்டி
கையில் திணிக்கப்பட்டது....!

மதிய உணவு முடிவடைகிறது
மீண்டும் தொடர்கிறது தேநீரும்
பண்டங்களின் அணிவகுப்பும்

அனைத்தையும் உண்டு முடித்து
வண்ணங்களை குழப்பிய சுவரில்
தொடர்ந்து எழுதப்படுகிறது

இவன் எழுதிய இடமெல்லாம் தின்று
விடப்பட்ட
குப்பைகளை இங்கே கோட்டாதீர்
எனும் தூய வரிகள்....!

–

**கவிஞர் கார்கவி,**
நாகப்பட்டினம்.

# மனித நேயம்

மனதில் ஏனடா காயம்? உலகில்
மருந்தாக இருக்கு மனித நேயம்.

மனதில் அன்பாய் இருந்தால் நாளும்
வாழ்வில் அழகாய் பெறுவோம் யாவும்..

அன்பே உலகம் என்பதனால் - இறைவன்
அழகாய் உலகம் படைத்து விட்டான்..

அன்பாலே உலகை ஆள வைத்தான்…
வானம், அளவில் உயரம் என்றால்

கடலில் ஆழம் அதிகம் என்றால்
சூட்டால் சூரியன் எரிக்கும் என்றால்...

அன்பால் உலகம் ஆட்சி செய்யும்
அன்பு ஒன்றே மனதை வெல்லும்...

--
(வாழ்வியல் கவி)

சா.நாகூர் பிச்சை
திண்டுக்கல்.



# காற்றில் மிதந்தபடி

தட்டுத் தடுமாறி
நடக்கலானேன்
வந்தவழியே திரும்பி
நிலவில் இறங்கிய
விண்வெளி ஓடத்திலேறி அமர்ந்தேன்...
தொடர்ந்த உடலசைவு
சட்டென கண்விழித்து காண்கையில் ...
அயர்ந்துறங்கும் அப்பாவின் நெஞ்சினில்
தலைசாய்ந்தபடி கிடக்கிறேன்
கனவென உணர்ந்து.

–

சாயிராம்,
தஞ்சாவூர்.
9443394625.

# அதே சத்தம்

சரியான கூட்டம் வரிசையில் நின்று
காக்கை குருவிகள் சத்தமிடுவதை கேட்டபடி
மெல்ல அசைபோடுகிறேன்
இதே பள்ளியில் தான்
இதே இடத்தில் தான்
வரிசையில் நிற்காத எங்களை
ஆசிரியர்களின் பிரம்புகள்
தோலுரித்திருக்கின்றன
அன்றைய பெரிய மரங்கள் எதுவும்
இப்போது இல்லை
என்ன கவி இப்பதான் வரயா
பார்த்துக்கப்பா உன் அண்ணன் மாதிரி
கவனம் இங்கு வந்தது
எப்பா கொஞ்சம் சீக்கிரம் முன்னாடி போயேன்
பின்னாலிருந்து ஒரு குரல்
சீக்கிரம் முன்னால் போகும் ஆசை யாருக்கில்லை
ஆனால் மரணத்திற்கு மட்டும் தாமதிக்கிறார்கள்
திடீரென பத்திரிகையாளர்கள் கூட்டம்
மின்னல் ஒளிகள் புகைப்படம் எடுக்க
உள்ளே மை வைத்ததை காட்டியபடி
யாருக்கும் தெரியாமல்
ஒரு பொத்தானை அமுக்கினார்
சில கணங்கள் நீடிக்கும் ஒரு சத்தம் வந்தது
உடனே வெளிச்சத்தின் புடைசூழ வெளியேறினார்
நானும் சென்று மை வைத்துக் கொண்டு
ஒரு பொத்தானை அமுக்கினேன்
பாருங்களேன்
மீண்டும் அதே சத்தம்!

–

கி.கவியரசன்

# எனக்கு ஒரு கனவு உண்டு – மார்டின் லூதர் கிங்

இந்த இடத்தில் கொந்தளிக்கும் மக்கள் கடல் முன்பு நான் இங்கு நின்று கொண்டிருக்கிறேன். ஏட்டளவில் ஒப்பந்தம் கையெழுத்தாகி நூறாண்டுகள் கடந்துவிட்டது. கிடைத்ததா நம் இன மக்களுக்கு உரிமை. கறுப்பினத்தவரை அடிமையாகக் கருதும் வெள்ளை இனத்தவரின் மனப்போக்கு இன்னும் மாறவில்லை. நிறத்தால் தாங்கள் உயர்ந்தவர்கள் என்றே அவர்கள்நினைக்கிறார்கள். வெள்ளையர்கள் மட்டும் – என எழுதப்பட்டிருக்கும் பெயர்ப்பலகையே அதற்கு உதாரணம். எப்போதும் ஒரு சாரார் சார்பாகவே பூமி சுழலாது. போராட்டம் என்று நாம் வன்முறையை கையில் எடுத்துவிடக் கூடாது. மகாத்மா காந்தி அகிம்சையைக் கைகொண்டதினால்தான் இந்தியா சுதந்திரம் பெற்றது. ஆயுதம் ஏந்துவது எந்தப் பிரச்சினைக்கும் தீர்வைக் கொடுக்காது. வெள்ளையினத்தவர்கள் மீது தாக்குதலை நிகழ்த்துபவர்கள் போராட்டத்தை வேறு வழியில் திசைதிருப்ப பார்க்கிறார்கள்.

எல்லோரும் கடவுளின் புத்திரர்கள் இதில் நிறம் எங்கிருந்து வந்தது. நாடு, மொழி, இனம் என்று பிரிவினை காட்டுவதைவிட தோல் நிறத்தால் ஒருவன் உயர்ந்தவன் என்பதை என் நெற்றிப்பொட்டில் துப்பாக்கியை வைத்து மிரட்னாலும் நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். ஒருவனின் மதிப்பு குணத்தால் தான் தீர்மானிக்கப்பட வேண்டுமே தவிர நிறத்தால் அல்ல. ஆள்வோர்கள் கூட கறுப்பினத்தவரை குற்றவாளியாக பார்க்கும் மனோபாவம் மாற வேண்டும். பிறப்பால் நாங்கள் உயர்ந்தவர்கள் என்று யாரும் இங்கு மார்தட்டிக் கொள்ள முடியாது. எல்லோரும் அன்னையின் வயிற்றில் பத்து மாதம் இருந்துதான் பிறக்கிறோம். இந்த தேசத்தின் வளர்ச்சியில் கறுப்பினத்தவர்களுக்கு பங்கு இல்லை என்று சொல்லுங்கள் பார்ப்போம். ஒரு அரசாங்கமானது நிறப்பாகுபாட்டை முன்வைத்து ஒரு இனத்தின் மீதே அக்கறை இல்லாமல் நடந்து கொள்டால் நாங்கள் என்ன செய்வது.

அமெரிக்கா சுதந்திரமடைந்த போது இந்த தேசம் வெள்ளையர்களுக்கு மட்டுமே சொந்தம் என்றா அரசாணை வெளியிட்டீர்கள். அமெரிக்க விடுதலை போரில் கறுப்பினத்தவர்கள் இரத்தம் சிந்தவில்லையா என்ன? எங்களை ஆள்வோர்களை நாங்கள் தீர்மானிக்கக் கூடாது என்பதால் தானே கறுப்பினத்தவர்களுக்கு வாக்குரிமையை நீங்கள் வழங்கவில்லை. அடக்குமுறைகளுக்கு நாங்கள் அஞ்சமாட்டோம். தோட்டாக்களுக்கு பயந்த காலமெல்லாம் மலையேறிவிட்டது. செய் அல்லது செத்து மடி இதுவே எங்கள் முடிவு. எப்போது கடவுள் வானத்திலிருந்து இறங்கி வந்து சொன்னார் வெள்ளையர் மட்டுமே எனது குமாரரர்கள் என்று. வெள்ளை இனத்தவரின் கடவுள் கருப்புத் தோலைக் கொண்டிருந்தால் உடனே எல்லா வெள்ளைஇனத்தாரும் சேர்ந்து அவமானம் தாங்காமல் தற்கொலை செய்து கொள்வீர்களா? சிறகு இருப்பதே பறப்பதற்காகத்தானே. வானம் விசாலமானது

தனிப்பட்டவர்களுக்கு மட்டும் என இந்த உலகை யாரும் சொந்த கொண்டாட முடியாது. நான் இப்போது இங்கு நின்று பேசுவது வெள்ளை மாளிகையின் வேர்களையே அசைத்துப் பார்க்கும்.

நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள் ஒடுக்கப்பட்ட இனம் ஒருநாள் விஸ்வரூபம் எடுக்குமென்று. குட்ட குட்டக் குனிவது இனி நடக்காது. நாங்கள் இந்த அமெரிக்க நாட்டின் பங்குதாரர்கள். எங்களது உரிமைகளை நாங்கள் போராடிப் பெறுவோம். ஒரு சிறுதீப்பொறி காட்டையே அழித்துவிடப்போகிறது. உரிமையைப் பெறும்வரை இந்தப் போராட்டம் ஓயாது. மழையைத் தருவதே கருமேகங்கள் தானே. கருவண்ணம் என்பதற்காக இரவு வானத்தை வெறுத்துவிடுவோமா? சட்டம் எல்லா மக்களையும் சமமாக நடத்து வேண்டும். பள்ளிப் பருவத்திலேயே குழந்தைகளிடம் கறுப்பின வெறுப்பை நஞ்சாக ஊட்டி வளர்க்கக் கூடாது. கோஷமிட்டுவிட்டு அடங்கிப் போய்விடுவார்கள் என எண்ணாதீர்கள். அநீதிக்கு எதிரான இந்தப் போர் என்னோடு முடியப்போவதில்லை. வாழ்ந்தால் ஆறரை கோடி முழுமையும் வாழ்வோம் வீழில் ஆறரைகோடி முழுமையும் வீழ்வோம். கனன்று கொண்டிருக்கும் எரிமலை ஒரு நாள் நெருப்பை கக்கியே தீரும்.

கறுப்பினத்தவர்களின் விடுதலைக்காக தூக்குகயிற்றை முத்தமிடவும் நான் தயாராக இருக்கிறேன். அலைகளை தடுத்துவிடலாம் ஆழிப்பேரலையை. எனக்கு ஒரு கனவு உண்டு. நீங்கள் உருவாக்கி வைத்திருக்கும் சர்ச்களில் வெள்ளைக்காரர்களுக்கு சரிசமமாக கறுப்பினத்தவரும் அமரும் நிலை வரும். ஆள்வோர்களைத் தீர்மானிக்கும் வாக்குரிமை எங்களுக்கு கிடைக்கும். வல்லாதிக்க அமெரிக்க நாட்டினை ஆள்வதற்கு ஒரு கறுப்பினத்தவர் புறப்பட்டு வருவார். இன்று ஒடுக்கப்பட்டவர்களுக்காக நான் விடுக்கும் இவ்வுரை ஒவ்வொரு போராட்டக் குழுவுக்கும் வேதமாகும். எனக்கு ஒரு கனவு உண்டு. ப்ராட்டஸ்டாண்டுகளுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையே சகோதரத்துவம் மலருமென்று. எனக்கு ஒரு கனவு உண்டு. வெள்ளை இனத்தவர்கள் கறுப்பினத்தவர்கள் மீது காட்டும் வெறுப்பு ஒருநாள் அன்பாக மாறுமென்று. அமெரிக்க நாட்டின் முதுகெலும்பாக கறுப்பினத்தவர்கள் வரும் காலங்களில் கருதப்படுவார்களென்று. வெள்ளை இனத்தவர்கள் கறுப்பினத்தவர்களோடு கைகுலுக்க தயக்கம் காட்ட மாட்டார்களென்று. எனக்கு ஒரு கனவு உண்டு. இந்த உலகில் கறுப்பினத்தவரை இரட்சிக்க ஒரு தேவதூதன் தோன்றுவானென்று.

வருங்காலங்களில் கறுப்பினத்தவர்களிடையே வரலாற்று நாயகர்கள் உருவாகி வருவார்களென்று. மகாத்மா காந்தி போல நாமும் அகிம்சையை ஆயுதமாக்கிக் கொள்வோம். துப்பாக்கிகளுக்கு துப்பாக்கிகளாலேயே பதில் சொல்லும் தேசம் அகிம்சைக்கு தலைவணங்கியே தீரும். நான் இங்கு விதைத்தது வருங்காலங்களில் விருட்சமாகும். சிக்கிமுக்கி கற்களில் நெருப்புப்பொறி ஒழிந்துள்ளது என நான்

நிருபித்துவிட்டேன். நாளை நாடு முழுவதும் சுதந்திரத்தீ பற்றி எரியப்போகிறது. எனது வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டு எல்லா கறுப்பினத்தவர்களும் வீதியில் இறங்கி போராடப்போகிறார்கள். இன்று இங்கு நான் காணும் எழுச்சி நாளைய அமெரிக்க நாட்டின் தலைவிதியையே மாற்றிவிடும். எனது கனவு நனவாகும் நாள் வெகுதொலைவில் இல்லை.



–
ப.மதியழகன்,
*115, வள்ளலார் சாலை,*
*ஆர்.பி.சிவம் நகர்,*
*மன்னார்குடி - 614001.*
*திருவாரூர் மாவட்டம்.*
*கைப்பேசி: 9597332952*
*பகிரி: 9384251845*

---

## துளிப்பாக்கள்

கணினி இயக்கம் வேகமெடுக்க
கடினமாகிறது
சமையல் வேலை

ஆயுத எழுத்தாகிறது
ஓர் எழுதுகோல்
கல்லுடைக்கும் சிறுமி

விளக்கொளியில்
தஞ்சமடைகிறது
நிழல்

வேகமாய் எங்குச் செல்கிறது
சிறகடிக்கும் இந்தப் பறவை
பூமியில் ஓர் நிழல்

உச்சி முகர்ந்த மழலையின்
புன்னகை ஒளி வீச
லேசாகிறது அடிவயிறு

தூண்டிலில் சிக்கி
கிழிகின்றன சுயமரியாதை
விளம்பரங்களில் பெண்கள்

ஓர் அழகிய ஓவியம்
களைந்துவிடுகிறது
நீர்ப்பரப்பில் சிந்தும் துளி

–
பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்.
6380704001



## உயிரோடு வாங்கிய மீனை
குழம்பாக்கலாமா,
கருவாடாக்கலாமாயென அம்மா
சிந்தித்து கொண்டிருக்கையில்,
பறித்துச் சென்று மீன் குடுவைக்குள்
இட்டு தனக்கான
உலகமாக்கிக் கொண்டாள்...
பர்கானா!

## முத்தத்தின் விலை
ஒரு சாக்லெட்டென
தீர்மானிக்கப்பட்ட பின்னொரு நாளில்
முத்த மழை பொழிந்து
கொண்டிருக்கிறாள் மகள்,
புயல் மழையென வீட்டுக்குள்
முடங்கிக்கிடக்கிறேன் நான்!

## பறக்க மட்டும்
செய்வதில்லை,
பறக்கவும் வைக்கின்றன...
பறவை கவிதைகள்!

## பிடிப்பதும்
பறக்கவிடுவதுமாயிருக்கிறான்
பெயர்தெரியாத சிறுவன்,
அவனிடம்
அகப்படுவதும் பறப்பதுமாய்
விளையாடிக் கொண்டிருக்கிறது...
வண்ணத்துப்பூச்சி!

- அ. பர்கானா அக்கிம்,
சிவதாபுரம், சேலம்.



---

## சூரியனை பிடித்து விட்டு
சுருக்கி விரிக்கும் கிளைகளிடம்
குழந்தைகளின் பேரானந்தம்

பாழடைந்த கோயில் சிலை
தினமும் நடக்கும் அலங்காரம்
மாலையாகும் எறும்புகளின் வரிசை

சருகுகளின் பேச்சு
கலையாத தியானத்திலிருக்கும்
புத்தரின் இதழில் புன்னகை

அப்பாவைப் போலவே உழைக்கும்
நாங்கள் தின்ன
சோளக்காட்டு பொம்மையில் சட்டை

தரையிறங்கும் விமானம்
அதிரும் பூமியின் மேல்
பறக்க ஆயத்தமாகும் தூசிகள்

--

சா. கா. பாரதி ராஜா,
9944315732



## 1. நீலவானின் இரவில்...

காதலர் தினத்தன்று..
சந்தித்த வேளையில்...
காதலித்த அவனே...
கணவனாக வேண்டுமென...
கனவாயிருந்த - எனக்கு
கயவனென அறியாமல்
காத்திருந்த வருடங்களும்...
கசந்தே போனது...
அந்தி மாலைப்பொழுதில்
ரயிலேறிய பயணமாய்...
இருவரும் பேசிக்கொண்டே-நீள.
பழகிய தோழனாய்...
அறிமுகம் செய்தான்...
தோழர்கள் நால்வருமென...
நால்வரும் நல்முறையில்...
நடவடிக்கையை வெளிப்படுத்த..
ரயிலும் வேகமெடுக்க-நானிருந்த
ரயில் பெட்டியில்...
நால்வரோடு அவனும்...
ஐவராய் இணைந்தே...
என்னை கொன்டு
செல்ல வந்திருப்பதாய்...
நானும் அறிந்திராது-என்
காதலும் அறிந்திராது...
கதவை சாத்தி...
அவனோடிணைந்து ஐவரும்...
என்னை துவம்சம்
செய்வதிலே குறியாய்...
ஒருவன் ஒருவனாய் - என்
வாழ்வின் பொக்கிஷமாய்...
கட்டிக்காத்த கற்பை...
கதற கதற...
கலங்கடித்ததில் காதலித்த...
கேடுகெட்ட காதலனுமொருவனும்...
மகிழ்வாய் அனுபவிக்க-
என்னுயிரை...
ஐவரும் இணைந்து
கொன்றே விட்டனரோ...?
ரயிலும் வேகத்தை...
குறைந்திருந்த நொடி...
ஐவரும் ரயிலிலிருந்து
குதித்த நொடியில்-உன்மத்தம்
கொண்ட ஐவரையும்..
அடுத்த ரயில்...
ஏறி இறங்கி..
கொன்றே நகர்ந்தது...
வலியோடு மகிழ்ந்து...
மரணத்தை தழுவி...
பெட்டியில் கிடந்தேன்- என்
கண்கள் விரிய...
நீலவானம் கருத்து...
இருளை சூழ்ந்திருந்தது.
மகளென உரிமைக்கொள்ள...
தந்தை வருவார்...
என்னை உடைச்சுற்றி - அவரிடம்
ஒப்படைத்து விடுங்கள்...
என்னுயிரற்ற உடலோடு...
உயிருள்ள ஜடமாகவாவது
என் அப்பா -என்னை
தூக்கிச் செல்லட்டும்.

## 2.கண்ணாடி பேழைக்குள் அப்பா...

என்னை சுமந்தவரை
சுமந்து ஒய்யாரமாய்...
உயர்பதவி பெற்றதோ.???
ஓயாமல் உழைத்தவரை...
ஓய்வெடுக்க வைக்கிறதோ.???
அப்பாவின் ஆசையெல்லாம்...
பேரப் பிள்ளைகளை
மடியில் கிடத்தி

கதைத்திட தானே.!!!
கதைக்கா நேரங்களை...
கண்ணாடி பேழையிடம்
கதைத்து கொண்டுள்ளாரோ..?
ஆயிரம் கதைபேசி...
மகிழ்ந்த நிமிடங்களை...
நினைத்து நினைத்து...
நீங்காவிடம் நீ- சென்றாலும்...
கண்ணாடி பேழைக்குள்ளும்
உன் அழகு....
துயிலுறக்கம் கொள்ளுதே...
உன்னை ஒருநாள்
சுகமாய் சுமப்பதிலே
தவமிருந்ததோ அது...
வருடங்கள் பல
என்னை நீயும்
சுமந்ததில் நானென்ன
பாக்கியம் செய்தேனோ...?
நானறியேன் அப்பா...
அப்பாவை சுமந்ததில்
கண்ணாடி பேழைக்கு
கிடைத்ததோர் பாக்கியம்...

–

இலக்கியா இளவரசன்,
மன்னார்குடி.

## நிழல்

தூரத்து வெளிச்சம் நெருங்க
நெருங்க
வளர்ந்துக்கொண்டிருக்கிறது
எனக்கு பின்னால்
எனது நிழல் .....!!!

## நினைவுகள் அலாதியானது...

என் ஒவ்வொரு பயணத்தின்
போதும் என்னோடு
தொடரும்
உன் நினைவுகள்
என்றும் அலாதியானது ..
அதில் ஓர் நதியென
பயணக்கிறேன் நான்
படகும் நீயே
துடுப்பும் நீயே ...!!!

## நெருஞ்சி முள்ளாய்

குத்துகின்ற
காதல்
குறிஞ்சி மலராய்
இருந்திருக்க வேண்டும்
........!!!!!

–

ச. இராஜ்குமார்
திருப்பத்தூர் மாவட்டம்.

## 1.பேசிக்கொண்டே இருக்கும் மரணங்கள்

பாலைவனத்தில் அழகான பூக்களை
யாரும் அனுமதிப்பதில்லை
வறண்டு போன நிலத்தில்
வறண்டு போன கடலில்
சில சொற்களைக் கண்டறியவே
இத்தனை முயற்சி
ஏமாற்றமும் களிப்பும் நிரம்பிய
சுவடுகளில் இன்னும்
தேவைப்படுகிறது
ஒரு பேரழிவோ
ஒரு கொண்டாட்டமோ
மூன்றாண்டுகளின் தொடர்ச்சியாக
மைக்ரான் பேரிழப்பில்
இந்த பூமி மரணத்தால் உறைந்து
போயிற்று
ஒரு புகைப்பட கலைஞன்
ஒரு ஓவியன்
ஒரு எழுத்தாளன்
வெறுமையாகப்பட்ட மனங்களை
பதிவு செய்தார்கள்
நாடெல்லாம் தொற்று நோய்
காலணிகளாய் கிடந்த நிலம்
ஜனநாயகத்திலும் பிரபுத்துவமாக
மலர்ந்து கிடக்கிறது
எப்பொழுதுமே அவர்கள் மலர்களை
விரும்புவதில்லை
காகிதங்களில் உறங்கும்
பூக்களின் மரணங்களை
திரும்பப் பார்க்கிறேன்
பெரும் வருத்தத்தோடு
ஏகபோக வர்த்தகத்தில் கைகோர்த்து
இரக்கமற்று
அவர்கள் வியாபாரம் செய்து
கொண்டிருக்கிறார்கள்.

## 2. நானற்ற வெளி

ரோம குழியின் ஆழத்தில்
அவிழ்ந்து வீழும் மெல்லிய
புன்னகையாய் உதிர்கிறது
சிலிர்ப்பு
காதலின் புதையல் விழிகளில்
தீராத ஸ்பரிச மோதலாய்
துளிர்க்கிறது தியான சுடர்
ஓயாது நீந்துகின்ற மீன்களுக்கு
ஒரு கணம் ஆசுவாசம் கொள்ள
அமைதி கொண்டு
மீண்டும் நீந்துகிறது மீன்
நெல் மணி விதையாகி
மண்ணைப்பிளந்து தூர் வைக்க
கருப்பையாக்கிக் கொண்டது
துளியளவு மண்ணை
துளி உயிரணு தேடி ஓடுகிறது
பெண்மையின் ஜீவ நாடிக்குள்
துயில் கொள்ளும் கருநாகமாய்
நாக்கை நீட்டிக் காத்திருக்கிறது சூல்
தூரத்துப் பருந்தொன்று
ரசிக்கிறது அவ்வப்பொழுது
லயங்களின் தனிமையை
சிற்பியின் சாரல்களில்
பூத்து விரிகிறது நளினம்
எல்லையற்ற உளறல்
மௌனத்தில் உதிர்க்கிறது
உணர்வு துகள்
ஒரு கணம் உடல்கள்
பிரபஞ்ச வெளியைத் தாண்டி
துளி அளவு தியானத்தை அருந்தி
சட்டென்று உடலில் பதிவிறக்கம்
செய்து கொள்கிறது
மீண்டும் பழைய நினைவுகளை.

## 3. கடத்தல்

ஏதோ ஒன்றை நிகழ்த்துகிறது

இந்தப்பறவைகள்
அப்படித்தான்
வசந்தத்தின் மொத்த அழகையும்
அழைத்து வந்து
நான் இருக்கிறேன்
என்று சொல்வது போல்
என் பார்வையில்
நெருங்கி வீட்டு முற்றத்தில்
அதிசயமாய் அமர்ந்தது
அதற்காகவே சொருகி வைத்திருந்த
கம்பங் கதிரின் வலியையும்
என்னுடைய வலியையும்
சற்று நேரத்தில்
வெகுதூரம் பறந்து
கடத்திப் போயிற்று
அந்த அக்கா குருவி.

## 4. நடை

நீ என்னை நிராகரிக்கலாம்
ஆனால் நான் நிரப்பிக்கொண்டே
இருக்கிறேன்
எனது வரிகளால்
என் இதயம் எப்பொழுதும்
பார்ப்பதையெல்லாம்
கவிதையாக்கிக் கொண்டிருக்கிறது
அது எனக்குள்ளே பாடிக்கொள்கிறது
நான் ஒரு உழவன்
என் பாட்டனும் அப்படியே
வாழ்ந்தவன்
உழவனை நீ நிராகரிக்கலாம்
என் கண்கள் மண்களால் ஆனவை
அதில் விளையும் அமுதங்கள்
எத்தனையோ இந்தியனின்
பசியைத் தீர்த்திருக்கிறது
கழனியில் களையெடுத்தவன் நான்
அதிகார வேர்களின் ஆழங்களை
என்னால் வெட்டமுடியவில்லை என்று
வருந்தியது உண்டு
வயலில் பறக்கும் என் வசந்தம்
தளர்ந்துவிடவில்லை இதுவரை
புதுவை நகரப் பறவைகளின்
வசந்தம் மாறிப்போய்விட்டது
எங்களால் இயலாமல் போனாலும்
சமைத்துக் கொண்டிருக்கிறோம்
பாதி சமையல் எங்களுடையதாகிறது
இதோ நாங்கள் காப்பாற்றி
வருவதெல்லாம் இந்த
மாறிப்போகாமல் இருக்கும்
விதைகளை மட்டும்தான்
அதற்காகத்தான் இவ்வளவு
துயரங்களும்
நாங்கள் நேசிக்கிறோம்
உங்களையும் உழவையும்
இந்த உலகத்தைக் கட்டி
எழுப்புகிறோம்
பெரும் உணவு குவியலால்
அதனால் தான் நீங்கள்.

–

ப.தனஞ்ஜெயன்.

## கோணல் மாணல் சாலை

திரும்பும் திசையெல்லாம்
நொறுங்கும் பேரிரைச்சல்
குண்டு குழி தாண்டி
குவைத் போவது போல தான்
கூன் போட்ட கடைஞ்ச சாலை
சிலந்தி வலை சித்திரம் தான்
ரோடெல்லாம்
நினைப்புக்கு குதிரை கால்கள்
முளைப்பதை ரசிப்பதா
மூச்சிரைப்பதா
இந்த வழியாக வேண்டாம்
அந்த வழியாக போவோம்
புத்திசாலியாமா நான்
கல் புதர் இல்லாத சாலை எங்கே மக்கா
மெயின் சாலையிலும் குறுக்கு வழி பல
குழி குழியாய் குரங்கு முகத்தில்
கோணல் மானல் ஜல்லி பற்கள்
நட்டுக்கொண்ட நாலு முடி என
நாலா பக்கமும் நங்கு நங்கென்று தான்
எருமை நாக்கு போல எலும்பு பேந்த
சாலை
மாடு மாதிரி மூஞ்சை மறைத்துக்
கொண்டே போக
கற்றுக் கொண்ட பிறகும்
எங்கோ எங்கோ உள்ளே எரி கல் ஒன்று
விழுகிறது
போகும் போதும் வரும் போதும்
யோசிக்கிறேன்
மண்டைக்கு ஹெல்மெட் இருக்கிறது
ரோட்டுக்கு தான் மண்டை உடைந்து
கிடக்கிறது.

## காலத்துக்கும் உன் நினைப்பு வேண்டும்

றோஸ் கலரு ரிப்பன்
கணுக்கால் நிறைஞ்ச கொலுசு சத்தம்
ரெண்டு விரல்ல கொஞ்சம் கம்மியா
நிறத்திருந்த மருதாணி
வெள்ளை சட்டைக்குள்ள
அதென்ன புதுசா ஒரு பெல்ட்டு
என்னமோ அப்பத்தாகிட்ட
சொன்னியாமா
போன வாட்டி கருப்பனாரு கோயில்
திருவிழாவுக்கு வந்தப்போ
மாமன் கண்டுக்கவே இல்லன்னு
என்ன பாக்கற
கண்டுக்காம இருந்தா
மேல சொன்னதெல்லாம் எப்பிடியாம்
இன்னொன்னு சொல்லவா
நான் குடிச்ச மோர் கிளாஸ்ல தான்
மோர் வேணும்னு கடக்காரன்கிட்ட
சண்டை போட்டுட்டு நின்னியே
அதையும் தான் பாத்தன்...
மோர் கிளாஸ்லாம்
தாறுமாறா பறக்கற மாதிரி ஒரு
கற்பனை
சன்னலோரம் இருக்கைல அது
நல்லாருந்துச்சு
ஊர் கோடி தாண்டும் போது
சட்டுனு நினைப்பு வந்துச்சு
உனக்கு நெனப்பிருக்கா
அருங்கரையம்மன் கோயில்ல நீ நிப்ப
வேளாங்கண்ணி கோயில்ல நான்
நிப்பன்
உன் சாமிகிட்ட நீ சத்தமா கேப்ப
என் சாமிகிட்ட நான் சத்தமில்லாம
கேப்பன்

விஷயம் என்னவோ ஒன்னுதான
என்ன பாக்குற
வேப்பங்கொழுந்து இனிக்கிற விஷயம்
அப்புறம்
தாராபுர அத்தபுள்ள நிறங்கூடத்தான்
ஆனா அவளுக்கு உன்ன மாதிரி
கொலுசு முத்து எண்ண தெரியாதே
என்ன பாக்க காலைலேருந்து
பூ பறிக்கற சாக்குல
என் வீட்டை சுத்தி சுத்தி நிக்க
உனக்குதான தெரிஞ்சிருக்கு
கார பணியாரம்
கரண்டி முட்டை
கருவாப்புல துவையல்
இதெல்லாம் உனக்குதான செய்ய
தெரியும்
அப்புறம் கொஞ்சம் கூட வெக்கப்படாம
என் செருப்பை போட்டுக்கிட்டு
ஊரு சுத்த உனக்கு தான புடிச்சிருக்கு
நாம பொதைச்சி மாங்கொட்டை
விளைஞ்சு
பெருசாகி வயித்த தள்ளிக்கிட்டு நிக்குது
எங்க நீன்னு கேட்டா
தாராபுரத்துகாரியவா காட்ட முடியும்
அதுக்கும் மேல ஒன்னு சொல்லட்டா
எனக்கு புடிச்ச பாதி நிலா
உன் நெத்திலதான இருக்கு
என்ன சிரிக்கரியா
பலூன் ஊதுன நினைப்புக்கு
உன் கன்னம் தான சாட்சி
என்ன வெக்கம் வருதா
ம்ம்ம்
நீ எழுதின லட்டர
ஆறு தடவை படிச்சிட்டேன்
ஏழாவது தடவை படிக்க போறேன்
35 மாமா இருந்துச்சு
மூணு நாலு இடத்துல முசுமுசுன்னு
கண்ணு கசங்கிருந்துச்சு

அப்புறம் தேடி புடிச்சு கண்டு
புடிச்சிட்டேன்
ஒளிச்சு வெச்சு மறைச்சு வெச்ச
ஒரே ஒரு ஒத்த முத்தம்
ஏன் இன்னொன்னு தந்தா தான்
என்னவாம்
அந்த ஊதா ஒதடு கோச்சுக்குமோ
சரி இந்த வாட்டி ஊருக்கு வரும் போது
சந்தைக்கு கூட்டிட்டு போறேன்
கிளிப்பச்ச கலர்ல சுடிதார்
வாங்கிக்கலாம்
அப்புறம் என்ன சொன்ன
ஹ்ம்...சந்தைல கருப்பட்டி கேக்க
மாட்டேன்னு
சொன்னா விட்ருவனா
கூட சேர்ந்து கல்கண்டும் வாங்கி தர
மாட்டேன்
என்ன எழுத்து இனிக்குதா
கண்ணுக்கிட்ட வெச்சு பாரு
கண் அடிக்கவும் செய்யும்

நெக்குருக என்ன வேண்டும்
காலத்துக்கும் உன் நினைப்பு வேண்டும்

இப்படிக்கு
மயிலு மாமா

**கவிஜி**

# அன்றும், இன்றும்!

“என்னடா தேச்சு இது வண்டிப்புழுதியா வந்துண்ட்ருக்கு இதுல எப்படி நீ காரை ஓட்டிண்டுவரியாம்?” என்ற ருக்மணியின் கவலையான கேள்விக்கு தேசிகன் முதலில் சிரித்தான் பிறகு,” அம்மா! நாமெல்லாம் மாறினாலும் நாம் இருந்த ஊர் மட்டும் மாறவே இல்லைங்கிறது இதனால தெரியறது இல்லையா?” என்றான்.

“என்னவோ போ, இத்தனை நாள் கழிச்சிவரோம். அதுவும் உனக்கு பத்துவருஷம் கழிச்சி ஜாம்ஜாம்னு ஆம்பளப்பையன் பொறந்ததுக்கு வேண்டுதல் செலுத்த தாமரைக்கண்ணன் கோயிலுக்கு குடும்பத்தோட வந்துருக்கோம் நல்லபடியா அதை முடிச்சி ஊர் திரும்பணும். ஆமா ...கோயில் பட்டாச்சாரிக்கு சொல்லிட்டியா நாம் வரப்போறதை? எங்கியாவது கோயிலை மூடிண்டு போயிடப் போறார்.....நாமும் ஊரைவிட்டுப்போய் இருபது வருஷத்துக்கு மேலாச்சு அதே நர்சிம்ம பட்டாச்சார் தானே இன்னமும் கைங்கர்யம் பண்ணிண்டு இருக்கார்?” என்று ருக்மணி ஒரே மூச்சில் தன் சந்தேகங்களை தெரிவித்தாள்.

“சித்த பேசாம வாயேண்டி. சென்னைல கிளம்பினதிலேருந்து லொடலொடன்னு பேசிண்டே வரே.. குழந்தை தாம் தூங்கிண்டு இருக்கு. வசுதா வேற அமெரிக்காலேருந்து நாலுநாள் முன்னாடிவந்து ஜெட்லாக் ல திண்டாட்றா...” என்று சிறினார் மகன் அருகில் அமர்ந்திருந்த திருமலை.

“அம்மாக்கு அந்த நாள் ஞாபகம் வந்தா இப்படித்தாம்ப்பா.. இருபது வருஷம் முன்னாடி வரைக்கும் நீங்களும் அம்மாவும் வாழ்ந்த இடம் இல்லையா? பசுமையான காவிரிக்கரையை விட்டு எப்படித்தான் நீங்க உங்க நண்பர் கூட வியாபாரம் பண்றதுக்கு பம்பாய் போனீங்களோ? அப்போ தான் நானும் பத்தாவ்து முடிச்ருந்தேன் +2லிருந்து பி ஈ வரை பம்பாய்தான்னு ஆகி எம் எஸ் படிக்க அமெரிக்காவும் போய் அங்கயே வேலையும் கிடச்சி கல்யாணமாகி செட்டிலாயிட்டேன். அம்மா வேண்டிண்டதால இங்க பிரார்த்தனைக்கு வரதோணித்தே ஒழிய நடுல நாம வரவே இல்லையே!.. அது தப்புதான், அதுக்கும் சேர்த்து தாமரைக்கண்ணனுக்கு பிராயச்சித்தம் செய்துடணம்”

“கண்டிப்பா! பெருமாளுக்கு வஸ்திரங்கள், தாயார் தங்கக்கொடி நாச்சியாருக்கும் புடவை வாங்கிட்டேன்.. துலாபாரத்துக்கு வேண்டிண்டபடி உருண்டை வெல்லம் பைல இருக்கு, பூ பழம் ட்ரைப்ரூட்ஸ் எல்லாம் ஏகத்துக்குக் கொண்டு வந்துட்டேன்..:

”அம்மா! நாம் குடி இருந்த ஆத்தைப்பாக்கணும் இடிச்சிகிடிச்சி கட்டியிருப்பா.. முதல்ல காவேரில குளிக்கணும்... அப்பலாம் இந்த தங்கனூர்லேருந்து ஜீயபுரம்வரைகும் நான் நண்பர்கள் கூட நீச்சலடிச்சிண்டே போய்டுவேன்.”

“அப்போ காவேரில ஜலம் இருந்ததுடா இப்போ இருக்கோ என்னவோ பம்பாய் மாதிரி இங்க மழை கொட்டறதில்லையே?”

”இல்லம்மா ஆடிக்கு ஜலம் விட்டுருக்கா கிருஷ்ண ராஜ சாகர்ல ரொம்பி வழியறதாமே? அதனால திருச்சிபக்கம் காவேரி ஓட்டமாதான் ஓடிண்டிருக்கா”

அப்போது அந்த மண் சாலையில் இடதுபுறமாக சிறிய வாய்க்கால் ஒன்று ஓடிக் கொண்டிருந்ததை கவனித்த வசுதா “ஆமாம் காவேரில தண்ணி இல்லேன்னா வாய்க்கால் இப்படி ஓடுமா அங்கபாருங்கோ” என்று குதூகலமய் கூவினாள். அந்த வாய்க்காலில்கிராமத்துச் சிறுவர்கள் சிலரும், சிறுமியர் சிலரும் குதித்து நீந்தி விளையாடிக் கொண்டிருந்தனர்.

தேசிகனும்அதை ரசித்துப்பார்த்தபடி” இப்படித்தான் வசு, நான் சின்ன வயசுல வாய்க்காலை ரெண்டுபண்ணுவேன் என்கூட எல்லா நேரமும் இருந்து நான் சொல்றதையெல்லாம் கேட்பான் ஜகு என்கிற ஜகன்னாதன். அவன் தான் கோயில் பட்டாச்சாரி பையன். இப்போ இதே ஊர்ல இருக்கானோ இல்லேன்னா வேற ஊர் , வெளி தேசம்னு போய்ட்டானோ ? என்னவோ நானும் பம்பாய் போனப்றம் தங்கனூர் ஃப்ரண்டைசையே மறந்துட்டேன் கல்லூரி, புது சகவாசத்துல பழையதெல்லாம் மறந்தே போய்ட்டேன். ”

“ஆமாண்டா அப்போல்லாம் எனக்கும் இங்க எவ்வளோ சிநேகம்! என்னவோ போ திருச்சி டவுன்ல ஜவுளிக்கடைல வேலைபார்த்துண்டு இருந்தவனை பம்பாய்ல சொந்தமாய் டெக்ஸ்டைல் பிசினஸ் ஆரம்பிக்கலாம்னு ஒருவடக்கத்திக்கார நண்பன் கூப்படவும் உங்க ரெண்டுபேரையும் அழைச்சிண்டு இங்கேருந்து ஓடவேண்டியதா போச்சு”

வருத்தமான குரலில் திருமலை சொல்லவும்” இப்ப என்ன குறைஞ்சு போச்சு? அங்கபோயி வியாபாரத்துல கொடிகட்டிதானே பறக்கறேள்? திருமலை டெக்ஸ்டைல்ஸ் அப்படீன்னா மும்பைக்கே தெரியறதே! ஆனா நடுல இங்க ஒருதடவை வந்திருக்கலாம் அதுவேணா தப்புன்னு சொல்லுவேன். அப்போதைக்கிப்போதேன்னு ஆழ்வார் சொன்னமாதிரி இன்னமும் தாமதம் பண்ணாம குழந்தைக்காகவாவது இங்க வந்தோமேன்னு நினச்சிக்ணும். சரிசரி, ஊருக்குள்ளயே வந்துட்டோம். அதோ கோயியில் கோபுரம் தெரியறது.. யாராத்லபோய் காரை நிறுத்தறது? அதுக்குதான் நாசிம்மபாட்டாடாச்சாரிக்கு போன் பண்ணி தெரிவிச்சியான்னு கேட்டேனேடா தேசிகா?” ருக்மணி பரிதவிப்புடன் கேட்டாள்.

“கூகுள்ள கோயில் நம்பர்பார்த்து பண்ணேன்மா.. யாரோ பட்சிராஜன்னு பேசினார் நரசிம்மபட்டருக்கு உறவாம்’ வாங்கோ அதே ஆகம்’தான்னார்”

''கோயிலை ஒட்டின ஆகம் நேக்கு நெனவிலிருக்கு.'' திருமலை உற்சாகமாய் சொல்லவும் அங்கே போய் காரை நிறுத்தினான் தேசிகன். எதிர்வீட்டிலிருந்து ஒரு தலை எட்டிப்பார்த்து உள்ளேபோய்விட்டது. பசுமாட்டினை கன்றுக்குட்டியோடு ஓட்டிக்கொண்டுபோன ஒரு சிறுவன் நின்று வேடிக்கைபார்க்க ஆரம்பித்தான்.

இருபது வருசம் முன்பு பார்த்த அதே ஓட்டு வீடு காரை பெயர்ந்த வாசல் திண்ணை. எண்ணைக் கறைகொண்ட பிறைகள்.

கார் நின்றதும். "வாங்கோ! வாங்கோ! நீங்கவரப்போறீங்கோன்னு ஆத்துல எல்லாரும் சொல்லிட்டா.. உங்கபோன் வரப்போ நான் காவேரிக்கு பெருமாளுக்கு திருமஞ்சன தீர்த்தம் கொண்டு வரப்போயிருந்தேன்'' என்று வாசலில் கைகுவித்தபடி இருபது வருசம் முன்பு பார்த்த அதே ஏழ்மைக்கோலத்தில் குள்ளமாய், மெலிந்த தேகமுடன் முன் வழுக்கை விழுந்த நெற்றியில் பளிச் என்ற திருமண்ணுடன் சற்றே தூக்கிய பற்கள் தெரிய புன்னகையுடன் வரவேற்றவரை திகைப்புடன் பார்த்தான் தேசிகன்..

''அட! நரசிம்மபட்டர் மாமாவா! இருபது வருசம் முந்தி நான்ப்பார்த்த மாதிரியே இருக்கேள்!'' என்று வியப்பில் கூவிவிட்டான்.

"நரசிம்மபட்டர் பரமபதிச்சி பல வருசம் ஆச்சே! அவர் பையன் ஜன்னாதன் இவன்... நான் நரசிம்மபட்டரோட தம்பி பட்சிராஜன். குழந்தை குட்டி இல்லாத என்னை ஜகுதான் அவனோட ஏழ்மை நிலையிலும் ரெண்டு பொண்குழந்தைகளையும் வச்சிண்டு என்னை ஆதரிக்கிறான். நானும் ஏதோ கோயில் கைங்கர்யத்துல அவனுக்குக் கூடமாட உதவி பண்ணுவேன்.'' என்று உள்ளிருந்த வாசலுக்கு வந்த நடுத்தரவயது மனிதர் சொல்லி முடித்தார்.

தேசிகன் கண்மலர்ந்தான்.'' ஜகுவா இது? அப்படியே உங்கப்பாவை அதாவது சாட்சாத் நரசிம்மபட்டரை திரும்பப்பாக்றாப்ல இருக்கு! அதிருக்கட்டும், டேய் ஜகு, நான் யார் தெரியறதாடா?'' என்று ஆர்வமுடன் கேட்டான்.

ஜகு உடம்பைக் குறுக்கிக் கொண்டபடி தயக்கமுடன் நெளிந்தான். தேசிகனை கூர்ந்து பார்த்துவிட்டு வெட்கத்துடன்'' தெரில்லயே மன்னிக்கணும்... வயசாச்சோல்லியோ?'' என்றான் மென்மையான குரலில்.

"முப்பத்தி ஏழு வயசெல்லாம் ஒரு வயசாடா? டேய் ஜகு! நான் உன் உன்கூடப் படிச்சவண்டா காவிரில நீச்சல்போட்டு ஜீயபுரம் வரை போய் வருஷம் ஒருநாள் முன்பு எப்போதோ ஒருகிழவிக்கு அவன் பேரன் வடிவில் போய் சாப்பிட்ட அந்த பழைய சாதமும் மாவடுவும் சாப்பிடஎழுந்தருள்வாரே ஸ்ரீரங்கம் ரங்கநாதர்! அவரை விழுந்து

விழுந்து சேவிச்சுட்டுவருவோமே மறந்துட்டியா?"

அவ்வளவுதான் உடனேயே ஜகு கண்மலர்ந்தான். ஒட்டியகன்னங்களில் உற்சாகம் கொப்பளிக்க "தேசிகா! தேச்சுவா? என்னடா இப்படி வெளிநாட்டுக்காரா மாதிரி சேப்பா பளபளன்னு இருக்கே! அப்போவே நீ நல்ல நெறம்தான் ஆனா இப்போ ரொம்ப ஜோரா இருக்கே.. அடையாளமே தெரில்லடா ஸாரிடா தேச்சு"

"நான் தாண்டா ஸாரி சொல்லணும்.. இத்தனை நாளா ஊர்ப்பக்கம் வராமயே இருந்துட்டேன் கல்யாணமாகி பலவருசம் குழந்தையே இல்லை. ஏதேதோ வைத்தியம் பார்த்தோம் அப்பத்தான் ஞாபகம் வந்து. தாமரைக்கண்ணனை மறந்துட்டேமேன்னு உடனே வேண்டிண்டுதான் பத்துவருஷம் கழிச்சி குழந்தைபிறந்திருக்கான் தாமரைக்கண்ணன்னுதான் பேர் வச்சிருக்கோம்.' தாம்' அப்படீன்னு அமெரிக்கால கூப்பிட சௌகர்யமா சுருக்கினாலும் நெல்லுல தாமரைக்கண்ணன் தான் பெயர் எழுதி காதுலயும் மூணுதடவ சொன்னோம்"

வந்திருப்பது பழைய நண்பன்  என்றதும் ஜகு ஓடிஓடி உபசாரம் செய்ய ஆரம்பித்து விட்டான். வந்தவர்களுடன் அவன் மனைவியும் குழந்தைகளும் பிரியமுடன் பேசினர். ஏழ்மை தாண்டவமாடும் நிலையிலும் குசேலரைப்போல அதைப்பற்றி யாருமே பிரஸ்தாபிக்கவில்லை..

கோயிலில் பிரார்த்தனைக்கான துலாபாரம் முடிந்தது., திருமஞ்சன சேவை அலங்காரம் அர்ச்சனை என்று  எல்லாம் முடிந்து ஜகுவின் இல்லத்தில் அவன் மனைவி அபிசேகவல்லி தளிகை செய்து போட்டஅக்கார அடிசில் தயிர்வடை புளியோதரை எனத் தரையில் அமர்ந்து தலைவாழை இலையில் விருந்தும்  சாப்பிட்டுமுடிந்தபின் தனிமையில் தேசிகன் தாசரதியிடம் கேட்டான்.

"ஏண்டா ஜகு நீ மேலபடிச்சி நல்லவேலைக்குப் போகலையா உன் அப்பா மாதிரியே கோயில்கைங்கர்யமே போதும்னு நீதான் முடிவெடுத்தியா?"

"தேச்சு! என்னடா இப்படி கேக்கறே? மறந்துட்டியா? காவேரில நாம் நீச்சல் அடிச்சிண்டு இருக்கறப்போ அன்னிக்கு ஒருநாள் அதாவது நீ ஊரை விட்டுப் போறதுக்கு முன்னாடி சொன்னதை நான் மறக்கலடா. அன்னிக்கு நீ இங்கிலீசுல விவேகானந்தர் சொன்னதா ஒண்ணு சொன்னியே அதையும் நான் மறக்கலடா"

"ஆ.. என்ன சொன்னேன் மறந்தேபோயிட்டேனே?"

“"I do not want to get material life, do not want the sense-life, but something higher." That is renunciation. Then, by the power of meditation, undo the

mischief that has been done.' அப்படீன்னு சொல்லி' ஆன்மிக வாழ்க்கை என்ன என்பதை இரண்டு வரிகளில் முடித்து விட்டார் விவேகாநந்தர்.' என்றாயே! மேலும் சொன்னாயே.

"இந்த தாமரைக்கண்ணன் லேசுப்பட்டவர் இல்லடா. பத்தாவதுல ஸ்டேட் ஃபஸ்ட் வரணும்னு வேண்டிண்டதை நிறைவேத்திட்டாரே! அவரை சேவிச்சாலே மனசு நிறைஞ்சி போயிட்றது அதனால உங்கப்பாமாதிரி நீயும் இதே கோயில்ல எப்பவும் இதே பெருமாளுக்கு ஆத்மார்த்தமாய்கைங்கர்யம் பண்ணனும்டா!' அப்படீன்னு சொன்னியே! அதைநான் சத்தியவாக்கா ஏத்துண்டேன். அதனாலதான் நான் பத்தாவதுக்கு மேல படிக்கல. அப்பாவும் எனக்கு இருபத்திரண்டு வயசு இருக்கறப்போ ஹார்ட் அட்டாக்ல பரமபதிச்சுட்டார். குடும்பத்தையும் கவனிக்கற பொறுப்பு வந்தது. ஆனா கோயிலைப் பார்த்துக்கணும்னு. எப்பவும் என் சிநேகிதன் தேசிகன் சொல்லைக் காப்பாத்திண்டு இதே ஊர்லயே இருக்கேன் என்கிற மனசு நிறைவா வாழ்ந்துண்டுவரேன்"

எப்போதோ தான் சொன்னதை மதித்து அதனாலேயே உத்தியோகம் தேடி வெளியூரெல்லாம் போகாமல் ஊரோடு கிடக்கும் ஜகுவின் அந்த மெலிந்த குள்ள உருவம் தன் முன் விஸ்வரூம் எடுக்கவும் தேசிகன் வாயடைத்துத்தான் போனான். அவனிடம் இப்படிச்சொன்னதையே மறந்து மேற்படிப்பு உயர்ந்த உத்தியோகம் அமெரிக்கா டாலரில் பணம் என்றிருந்த தன்னை அவனுடன் ஒப்பிட்டபோது தனது ஆறடி உயரத்திற்கு முன் வாமனனாய் வந்து ஓங்கி உலகளந்தவனாய், உத்தமனாய் ஜகு தென்பட்டான்!

கண்கள் பனிக்க ஏறிட்டு அவன் தோளை ஆதரவாய்த்தட்டினான்.

மாலை அனைவரும் காரில்கிளம்பும்போது ,"அடிக்கடி வரணும் தாமரைக்கண்ணனை சேவிக்கணும்" என்று தேசிகனின் அருகே வந்து மென்மையாய் கேட்டு கொண்டான் ஜகு.

தேசிகன் நா தழுதழுக்க"உனக்காக வருவேன்" என்று சொல்லி காரில் ஏறி அமர்ந்து கொண்டான்.

–

## மைதிலி நாராயணன் (ஷைலஜா),
A208, அனன்யாஸ் நானா நானி ஹோம்ஸ்,
Phase 4, கஸ்துரி நாயக்கன் பாளையம்,
வடவள்ளி, கோயம்புத்தூர் - 41
கைபேசி: 9008458256.

# பெண்களும், மாற்றமும்...

நிலையான உலகில்
நிலையில்லாத வாழ்வில்
எது நிரந்தரம்?!

ஆண் ஆதிக்கம் என்னும் கட்டனையில்
கட்டுண்டு
தன் என்ன சிறகுகளுக்கு தானே
சிறையிட்டு ..
மகளாய்...
துணைவியாய்...
தமக்கையாய்..
தாய்யாய்..
வாழ்ந்த பெண்கள் உலகில்
நல்லவை யாவும் கணவாய்...
முயற்சிகள் யாவும் முடையாய்...
உரிமைகள் யாவும் தடையாய்..
நவிந்து போன காலங்களில்
நவிழாது இருந்த நம்பிக்கை மாற்றம்
மட்டுமே.....!!!!

இதுவும் சில காலம்
நிச்சியம் நிலை மாறும்
காவியம் பல செய்வோம்
கல்வி சாலைகள் பல பயில்வோம்..
வாணிபம் பல புரிவோம்..
வான்வெளி வரை செல்வோம்..
காட்சிகள் பல படைபோம்...
நல்லாட்சிகள் பல புரிவோம்..
என்ற என்னகணவுகள் இன்று
நிதர்சனமாக...

வாய் இருந்தும் ஊமைகளாய் ...
காது இருந்தும் செவுடுகளாய்...
கண் இருந்தும் குறுடுகளாய்
கைகால் இருந்தும் முடவைகளாய்..
இருந்த வர்கம்..

வாய் மலர்ந்து..
கண் திறந்து...
சுதந்திர பறவைகளாய்..
சுய சிந்தனை கொண்டு ...
ஆணுக்கு நான் சலைதவளோ ?!..
என்று நிமிர்த்து நிற்கிறாள்...

பெண்ணியம் பேசும் எந்தய தோழா..
உன் கண்ணியம் காத்து
பெண்ணியத்தை போற்று...
ஆணுக்கு பெண் நிகர் என கொள் என்ற
நம் பாட்டன் வழி நில்...

மாற்றம் ஒன்றே நிதர்சனம்
பெண்ணிய மாற்றம்
நம் சமூக முன்னேற்றம்..
மறவாதே..
நம் தமிழ் மறவர் வழி நில்..

பெண்ணிய மாற்றம்
நம் சமூக முன்னேற்றம்..

--

கவிபாரதி. சதிஷ்,
விருதை.



# புரிதல்

காதல் மலர்வதும் கண்ணீரில்
நனைவதும் புரிதலின் மகத்துவமே..!
ஊடல் தொடர்வதும் கூடலில்
இணைவதும்
பிரிவின் புரிதல் தரும் கொடையே…!

புரிதலைப் புரிந்து கொண்டால் போதும்
பிரிதல் பிணக்கு பாதை மாறும்
புரிதலை தூரப் போட்டு மனசெல்லாம்
அழுக்கை சேர்த்தால் பிரிவும்
நிரந்தரமே..!

நான் என்ற ஆணவத்தில் நாம் என்ற
புனிதம் கெட்டுப் போய்விட
நான் செய்வதும் சொல்வதும் சரியென
வாதிடும் மனச்சாட்சியற்ற
மனிதர்களானோம்

மனிதமனம் உயர்வுபெற புரிதல்
போடும் பாதையியை பின்பற்றிடு -
அந்த
புத்தன் பெற்றிடாத ஞானமும் உன்
வசப்படும் புரிதல்படி நடந்திடு

புண்படு மனங்கள் ஏனோ புரிதலை
சரியாக புரிந்தே நடப்பதில்லை
புண்ணாகி மண்ணாகி அகந்தை
அடங்கையில் புரிதல் கண்ணீராய்
வெளிப்படும்

படைப்பின் புரிதலை சரியாக
கணித்தால் போர் என்ற அரக்ககுணம்
எதற்கு
வாழ்வின் ரகசியத்தை புரிந்துவிட்டால்
வாழுங் காலம் மகிழ்வின் வாசலாகும்

சாதி என்றும் மதம் என்றும்
சாக்கடையில் புரளும் மனிதர்களே
சாவின் பிடியில் நாமெல்லாம் சாதரண
உயிரி இப்புரிதலை உணர
மறுப்பதேனோ

பிறக்கும் போது யாவரும் மனித
இனமாக சிரித்திடும் விலங்காக
ஆனோம்
ஏனோ வளர வளர மதம் பிடித்த
பிசாசாக புரிதலின்றி வாழ்கிறோம்

அழகிய எதைக் காணினும்
அனுபவித்திட நினைக்கிறோம் - அது
அழுகியே போகும் என்ற புரிதலை
மறந்தே தொலைக்கிறோம்

புரிதலின்றியே பல போர்கள் நடக்கிது
அதை புரிந்திடாமல் வலியகரம்
எழுகிறது
புரிந்தே நடந்தால் பூமியின் மடியினில்
பூக்களின்  புன்னகையே சேமிக்கலாம்

தலைக்கேறும் தற்கொலைகள் யாவும்
புரிதலை கொலை செய்தே வெல்கிறது
தலைகால் புரியாத புரிதலால் வாழும்
காலத்தை பாதியிலே முடிக்கிறது

புரிதலின் ஆழத்தில் அறிவோ சிறு
புள்ளியாய் போகும் ஏனெனில்
அறிந்தவர்களை விட புரிதலின் பார்வை
பட்டவர்கள் மிகவும் குறைவே

–
ஞா. ரேணுகாசன்

## மௌனப்பூக்கள்

செடிகளை
அலங்கரித்துவிட்டு
பூக்கடைக்குள் நுழைந்து
பிணைக் கைதியாகிறாய்...!

தேனுண்ணும்வண்டுகளுக்கு
போதையைதெளித்துவிட்டு
பாதையில்உதிர்ந்துகிடக்கிறாய்மென்பா
தங்கள்தாங்கிடவோ?

மலரும் செடிகளில்அரும்பிய மலர்கள்
மாலைகளாய் கோர்க்கப்படுகின்றன
ஆராதனைக்காகவா...!

வாழ்வின் விளிம்பில்
மலரும் மங்கையர்கள்
மாலைகளை ஏந்தி
மலர்ந்து நிற்கின்றனர்
மணவாளனுக்கோ...!

அலுவலகப்பூக்களாய்
மலரும் மங்கையர்கள்
இயந்திரமாய் நகர்கின்றனர்
நாட்களை நகர்த்தியபடி...!

முட்களை வெட்டி
மலர்களை பறித்தவர்கள்
நாட்களை வெட்டி
நகர்த்துகின்றனர் காய்களை...!

சிகையழகும்நகையழகும்
பெற்ற மலர்கள்
அணியழகின்றிபூக்கின்றன
இல்லறத் தோட்டத்தில்...!

கருவை சுமக்கின்ற
மெல்லிய பூக்கள்
தாய்மை தொட்டிலை
ஆட்டுகின்றன
தாலாட்டுப்பூக்களாய்...!

ஒளிரும் சுடராய்
எரிந்து கொண்டே
கருகிக்கொண்டுதான்
இருக்கின்றன இன்னமும்
இந்த மௌனப்பூக்கள்...!

அர்ச்சனையில்
இறைப்பாதங்களில்
மலர்ந்தாலும் ஒளிர்ப்பூக்களாய்
வாழ்நாளில் மலர்வதுஎந்நாளோ
மௌனப்பூக்களுக்கு....!

## துளிப்பாக்கள்

ஆடையின்றி
தவிப்பில் மரங்கள்
இலையுதிர்காலம்.

உதிர்ந்த கிளையில்
தனியொரு கீதம்
கூவும் குயில்

மேகத்தின் வருடலில்
மெல்ல சிலிர்க்கிறேன்
இதமான காற்று

அடர்கின்ற இருளுக்குள்
ஒய்யாரமாய் படர்கிறது
சுடர்விடும் விளக்கு

விரட்டிய பின்பும்

உரிமை கொள்கிறது
கடிக்கும் கொசு

காலிதட்டில் ஓசையொடு
விழும் ஒருரூபாய் நாணயம்
சிரிக்கும் யாசகன்

குப்பைத் தொட்டிக்குள்
சிரிக்கும் கடவுள்
அனாதை குழந்தை

விழும் பனியில்
உறிஞ்சும் இதழ்கள்
ஒரு கோப்பைத் தேநீர்

கலர்கலராய் குருவிகள்
விரியா சிறகுகள்
வரைந்த ஓவியத்தில்

தியானத்தில் புத்தர்
அசைந்து ஆடுகிறது
சுடர்விடும் விளக்கு

குபேரர் வயிற்றில்
நிறைய காசுகள்
பிளாஸ்டிக் உண்டியல்

கைகூப்பி நிமிர்கிறான்
விண்ணைமுட்டி பார்க்கிறது
அசையா கோபுரம்

தூரத்தில் கடவுள்
நகர்ந்து அருகில் செல்கிறேன்
ஆசிர்வதிக்கும் யாசகன்

ஓசையுடன் பேசுகிறது
நாதஸ்வரமும் கொட்டுமேளமும்
திருவிழா கூட்டத்தில்

தியானத்திலும்
பேசும் விரல்கள்
மடியில் சந்தனமாலை

சுழன்ற அலைக்குள்
சிறைவாசம்
படர்ந்த மேகம்

## மோதல்

அவளின் மோதலில்
விழிகளிரண்டும்
சிவப்புச்சாயம்
பூசிக்கொண்டன..

இதயத்தை துடைத்துவைத்தேன்
குடிபுகாமல்
உடைத்துவிட்டுப்போனாய்
கதியற்றுபோகிறது
கணத்த சுமையோடு...

மோதிய இரவுகள்
நனைந்து போனது....
தழுவாத உறக்கத்தில்
விழிகள் மட்டுமே
தேடுகின்றன பெருக்கெடுத்த
நீரை வார்த்தெடுக்க...

கண்ணத்தில் பதிந்த
ஐந்து விரல்கள்
நீ தந்த பரிசாய்
நினைவுபடுத்துகிறது....!
மெல்ல தொட்டுப்பார்க்கிறேன்
ஐந்துவிரல்களும்கண்முன்னே
வந்துபோகின்றன..!

நீ கத்திச் சொன்ன
வார்த்தைகளை
மெல்லப்பிடித்து எழுதுகிறேன்...!
தத்தி தவழ்கின்றன
பூஞ்சோலையில்
மணக்கும் மலர்களாய்...!

எட்டி உதைத்த பந்தாய்
நான் விழும்போதெல்லாம்
உருண்டோடுவது பந்தல்ல...!
என்னுள் பூத்து குலுங்கும்
இதயமலர்களல்லவா அது...?

எழுதி வைத்தபெயர்கள்
மரத்தில் சிலிர்க்கிறதே
காற்றிடையே மரக்கிளைகள்
குடைவிரிக்கின்றன
நிழலோடு நாமும்
கையசைத்து நிற்கிறோம்
பெயரளவில்...

நீ தூக்கி
வீசும்போதெல்லாம்
நான் பற்றிக்கொள்கிறேன்
நம் அன்பான நினைவுகளை...

–

ஞா. முனிராஜ்,
அருப்புக்கோட்டை.

## உச்சிக்காய் ஊறுங்காய்

உந்தன் "ச்ச"ங்காய் பதித்திட்டாய்

தித்திப்பாய் திகைப்பாய்
நினைத்த நேரத்தில் இனித்திட்டாய்

மலைப்பாய் மகிழ்வாய்
மாற்றம் காண போதித்தாய்

கவலைகளைப் போக்கிட்டாய் ..
காயங்களை ஆற்றிட்டாய்...
கனவுகளையும் உயிர்ப்பித்தாய்..

அக்கறையாய் ஆ'தாரமாய்'
காதல் மனதில் படர்ந்திட்டாய்

கைப்பிடி மனமே போதுமென்றா
ஏதேதோ சொல்லி டு - விட்டாய்

இப்படியெல்லாம் பூசிக்க - நான்
யாசிக்க வேண்டுமென்றா யோசித்தாய்

–

சுந்தரம் மூர்த்தி
சென்னை 13.

# உறவான வேம்பு

பனியில் இலையுதிர்த்துப்
பங்குனியில் பூவும் பிஞ்சுமாய்
குளுகுளு நிழல்தரும்
கணக்கமூட்டு வேம்பு
அநேகம்பேரின் ஆயுர்வேதக்
கற்பக விருட்சம் ....
காலை மத்தியானம்
சாயுங்காலம் இராத்திரி
எந்நேரமும் ஜனங்களைச்
சேர்த்துக்கொண்டு
இலைகளின் சலசலப்போடு
அலாவி மகிழ்தலில்
அத்தனை மகிழ்ச்சி வேம்பிற்கு ...
பம்பரம் கோலி கோட்டிப்புல் நொண்டி
ஆபியம் ஆடுபுலி கபடியென்று
அல்லோலப்படும் புழுதியோடு
ஊரின் பால்யம் வளர்ப்பதில் போட்டி
அம்மாக்களுக்கும் வேம்பிற்கும் ...
அம்மை நோய்க்கு
அம்மன் கொடைக்கு -
காதுவலி வயிற்றுவலி
காத்து கருப்பு விரட்ட என
கொத்துக்கொத்தாய் தழைகள் தரும்
கொடைவள்ளல் வேம்பு ...
உச்சியில் கட்டியிருக்கும் கூட்டில்
முட்டைகள் திருடுவோரைக்
காரோமுரோவென கரைந்து
சப்பட்டையால் அடித்துவிரட்டித்
தலைக்குமேல் கூட்டமாய் வட்டமிடும்
காக்கைகளின் அலரல்
விடுமுறை நாட்களின் விநோத
வைபவம் ...
நடவு நாட்களில்
ஊரெங்குமுள்ள வேம்பனைத்தும்
மொட்டை வேசமிட
பச்சைப்பசேலென்று துளிரோடும்
தழையோடும்
நடுத்தெருவின் மார்பை
நிழலால் போர்த்திச்
கம்பீரமாய் செழித்திருக்கும் தோரணை
தெருக்கூத்தின் பீமனாட்டம் ...
பலநாள் திருடன்
கையும் களவுமாய் ஒருநாள் சிக்கித்
தண்டனைக்காய் கட்டியிருக்கையில்
மன்னிப்பின் மொழியைப்
பழுத்த இலைகளாய்
பலபலவென உதிர்க்கும்
கருணையோடே முதலில் ...
பழந்தின்று தோல்துப்பும் மைனாக்கள்
புணர்ச்சி விரும்பி
கிளைகளில் ஓடித்திரியும் அணில்கள்
புதுமணப் பெண்போல்
பொந்துகளில் ஒளிந்து
வெட்கத்தோடே எட்டிப்பார்க்கும்
ஆந்தைகள்
வழிதவறிவந்து பைத்தியம்
பிடித்தவரைப்போல்
கிளைகளை உலுக்கி அச்சுறுத்தும்
குழுப்பிரிந்த குரங்குகள்
சாமிப்பல்லி
தலையை ஆட்டித் தவழ்ந்து நகரும்
கிழட்டு ஓணான்கள்
விடிவதும் இருள்வதும் தெரியாமல்
போதையில் படுத்திருக்கும் குடிகாரரின்
சத்திரம் சாவடி சகலமும் வேம்பு ...
புயல்களில் பேயாடி
மழைகளில் வாயாடி
வெயிலினில் மனம்வாடி
வைரம்பாய வாழ்ந்திருந்து
சர்க்காரின் சாலை விரிவாக்கத்தில்
சாவுவந்து சாய்கையில்
வேப்பங்கொட்டைப் பொறுக்கும்
ஆயாக்களின்
ஒப்பாரிக்கு உறவான வேம்பைப்பற்றி

உங்களோடு பகிர்ந்துகொள்கையில்
கசப்பும் இனிப்பும் கலந்த
பழங்களின் விநோத சுவையைத்
தங்களாலும் அறிய முடியுந்தானே.

## மங்கலட்சுமி ஆயா

பக்கத்தூருக்கு ஏரோட்டிம்போனத்
தாத்தா
எளந்தமர நெழல்ல
மல்லாட்ட ஆய்ஞ்சிருந்த
மங்கலட்சிமியிடம் மனசப்
பறிகொடுத்து
அக்கா அண்ணங்கிட்ட அடம்புடுச்சி
அங்காளி பங்காளியோட
அடுத்தநாளே கெளம்பிட்டாராம்
பரிசம்போட...
'வயசுக்குவந்து மூனுமாசமாகல
பொண்ணுக்கேட்டு வந்திருக்கீங்க
சூரனாட்டம் வாட்டசாட்டமா
இருக்கிறதப் பார்த்துப்
புள்ள கட்டிக்க பயப்படுது'
கூட்டத்தில் யாரோ கூர்த்தீட்ட
'ஊருல ஒசத்தியான தலக்கட்டு
சொத்திருக்குப் பத்திருக்குச்
சொந்தமா நாவறுக்கட்டு வீடிருக்கு
வார்த்த மாறாத வகையறா
யோசிக்காம குடுங்க
நான் கட்டிக்கினு வந்தப்ப
வயசுக்கே வரல
பொம்மமாதிரி தோளுல தூக்கியாந்து
தாலிக்கட்டுனாரு இவுங்க அண்ணாரு
புருசன் புள்ளைங்கன்னு
பொழப்பு நல்லாத்தான போவுது'
கூட்டேரிப்பட்டு ஆயா நாட்டமை கூற
மங்கலட்சுமியின் அப்பா
மண்டைய ஆட்டிவிட்டார்...
பேருக்கு ஏத்தாப்போல
பீர்க்கம்பூ நெறத்தோட
பொன்னா மின்னும் மங்கலட்சுமி
வந்த மருமொவளுள
மாமியாரக் கவர்ந்த மவராசி ....
கூனிச்சம்பட்டு நெருப்புத் திருநா
கோரவேலி காத்தாங்கழுவு
மணலிப்பட்டு டூரிங்டாக்சி
பச்சையம்மா கொலதெய்வமுன்னு
எங்கப்போனாலும்
மாமியாரின் தொணை மங்கலட்சுமி
மத்த மருமொவளுக மொகத்தில்
காய்ஞ்ச எண்ணையக் காணாமே
கடுகு வெடிக்கும்
கட்டிக்கட்டியா கற்பூரம் எரியும்....
மாட்டுத்தரவுக்குப் போய்வந்தா
அம்மாக்கிட்ட தனியாவும்
பொண்டாட்டிக்கிட்ட தனியாவும்
பொட்டலம் அவுப்பாராம்
அமாவாசை கிருத்திகைக்கு
மத்தியானம் ஆனாலும்
மங்கலட்சுமியின் படையலுக்காய்
காய்ஞ்ச வயிரோட காத்திருப்பாராம்
அக்காங்க ரெண்டு
அண்ணணுங்க மூனு
தம்பிக்காரன் ஒருத்தன்னு
ஊடுபூராவும் ஒறவுங்க இருந்தாலும்
மங்கலட்சுமியின் மாராப்பில்
மயங்கிக் கெடப்பாராம் தாத்தா....
கதைசொல்வதை நிறுத்தி
மனசுக்குள் எதையோ யோசிச்சி
வெற்றிலை இடிக்கும் ஆயாவை
அப்புறம் என்னன்னு உசுப்பேத்துனா
'சங்கமாங்கி பேசாமத் தூங்குடா
எல்லாத்தையும் நோண்டறதுல
அந்த மனுசனாட்டமே
மாறாம பொறந்திருக்கேன்னு'
நோறுமேல குத்தி
ஆம்படையானுக்குப் போர்த்திவிடும்

லாவகத்தில்
அச்சிப்பிகாம துப்பட்டிப் போர்த்திச்
சிவங்கோயிலு கட்டிச்
சித்தம் பேதலிச்சு செத்தவரை
இடுங்கிய கண்ணோடு
என்னில் தேடித் தேய்வாள்
மங்கலட்சுமி ஆயா!

## கொள்ளைப்பிரியம்

சித்திரை மாத
பௌர்ணமி விழாவில்
காத்தவராயன் சிலைசுமந்து
வீதியுலா வருகிறேன்
தண்ணீர்க் குடத்துடன்
பாதைபூஜை செய்ய
ஆசை ஆசையாய்
வெகுநேரம் காத்திருந்தாய்
உன்வீட்டு வாசலை வந்தடைகையில்
அவசர அவசரமாய்
குடத்தை வாங்கி
பூஜை செய்த
உன் அம்மாவை
எதிரியைப்போல்
முறைத்துப்பார்க்கையில்
முகமெங்கும் சிவந்து மலர்ந்தது
என்மீதான கொள்ளைப்பிரியம்!

## மயானக் கொள்ளை

பறைகள் அதிர
பம்பைகள் முழங்க
மயானக்கொள்ளை விழாவில்
காளி
காட்டேரி
காத்தவராயன்
குறத்தி
சூரன்
அம்மன் வேடமிட்டுத்
தெருக்களைத் திகிலாக்கி
வருபவர்மேல்
காய்கறி பழங்களை
உணவுப்பண்டங்களைச்
சில்லரைகளை வாரிவீசி கொள்ளையிட
விழிகளால் வெட்கங்களையும்
இதழ்களால் பூக்களையும்
வகைவகையாய் வாரியிரைக்கும்
உன்னையும் என்னையும்
கூட்டத்தோடு கூட்டமாய்
இதயம் நிறைந்து
இரசித்திருந்தது காதல்!

## நினைவு காக்கை

நெடுஞ்சாலை திருப்பமொன்றில்
இன்னதென்று அறியாத விலங்கென
மிக எளிதாய் உதறி வீசிய
என் இதயம்
இரத்த வெள்ளத்தில்
உடல்நசுங்கி சிதைந்திருக்கிறது
பிறகும் விடாமல்
வயிறுநிறையப் பசியோடு
கூட்டமாய் கொத்திக்கிழிக்க
தயார் ஆவதேன்?
உன் நினைவு காக்கைகள்!

--

**பொன்.தெய்வா.**
ஐவேலி.
விழுப்புரம் மாவட்டம்.



# விசு படங்கள் பேசும் பெண்ணியம்

"நீ சௌக்கியம் இல்லாம சௌக்கியம்னு பொய் சொல்லும்போது நான் எப்படி அம்மா சௌக்கியமா இருக்க முடியும்" எனும் அவரின் வசனத்திற்கு ஏற்ப பெண்களின் பிரச்சனைகளை மையமாகக் கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் படங்கள் அமைத்திருப்பார்.

பெரும்பாலும் விசு ஐயா படங்கள் அனைத்தும் மிக அழகாக அமைக்கப்பட்ட அர்த்தமுள்ள குடும்ப படங்களாக இருக்கும். அவர் படங்களில் பெண்களின் கதாபாத்திரங்கள் வலுவானதாக அமைந்திருக்கும். அந்த காலகட்டத்தில், ஏன் இன்றும் சில இடங்களில் நிகழும் பெண்களின் வாழ்க்கை பிரச்சனைகளையும் வாழ்க்கை உண்மைகளையும் காட்சி படுத்தியுள்ளார். அவற்றில் மூன்று படங்களை மகளிர் தின மாதத்தை ஒட்டி நாம் நினைவு கூர்ந்து ரசிப்போம்.

முதலில் "பெண்மணி அவள் கண்மணி" ரேடியோ மாமாவோடு ஆரம்பிப்போம். இந்த ஒரு படத்திலேயே பெண்களின் பெரிய பிரச்சனைகளாகிய வரதட்சணைக் கொடுமை, குடிகாரக் கணவன் மற்றும் பெண் சுதந்திரம் என்ற பெயரில் சில பெண்கள் இழைக்கும் தவறுகளை மூன்று குடும்பங்களின் வாயிலாக காட்டியிருப்பார். ஒரு குடும்பத்தில் மாமியார் மாமனாரை மருமகள் செய்யும் கொடுமைகள் எதிர்மாறாக மற்றொரு குடும்பத்தில் மாமியார் மருமகளை கொடுமை செய்வார்.

இவ்வாறு இரு கோணங்களில் காட்சி படுத்தியிருப்பார். உண்மையான அன்பினால் ஒரு மனைவி தன் கணவனை எந்த துயரிலிருந்தும் காப்பாள் என்பதை உணர்த்தும் வண்ணம் மாதுரி அரவிந்தை குடிப்பழக்கத்திலிருந்து விடுவிப்பார்.  வரதட்சணை, மருமகளின் உயிரை மாய்க்கும் அளவிற்கு கொடுமையாக கொண்டு போய்விடும். சம்பாரிக்க வெளியூர் செல்வது மட்டுமல்ல வீட்டிலும் பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டிய கணவரின் பொறுப்பின்மையும் காரணம் என்று காட்டியிருப்பார்.

அடுத்து இளவரசனின் குடும்பம், பெண் சுதந்திரம் பற்றி ஊரெல்லாம் பேசும் மருமகள் வீட்டில் இருக்கும் மாமியாரும் பெண் என்பதை நினைக்க மறந்தால் போலும்! அடிமையினும் மேலாக நடத்துவார். சிறு வயதிலிருந்து பாராட்டி சீராட்டி வாழ்வே நீதான் என்று நினைத்து வளர்க்கும் பெற்றோரை எப்படி தான் இப்படி தன் மனைவி நடத்துவதை தட்டிக்கேட்க தவரினானோ கணவன்.. இறுதியில் நம் ஆச்சி மனோரமா கதாபாத்திரத்தை ஆகச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைத்துப் பெண்மை மறவாதப் புதுமைப்பெண்ணாக அழகாய் காட்டியிருப்பார்.

அடுத்து "சம்சாரம் அது மின்சாரம்", இந்த படம் கூட்டுக்குடும்பத்தின் மகத்துவத்தை சொல்லும் ஒரு அருமையான படம். இதில் வரும் லட்சுமி அவர்களின் கதாப்பாத்திரம் கூறும் ஒரு நிதர்சனம், ஒரு பெண்ணின் மரியாதையும் அவமரியாதையும் புகுந்த வீட்டில் அந்த பெண்ணின் கணவனை பொறுத்து தான் அமையும், என்னதான் அன்பான குடும்பமாக இருந்தாலும் ரகுவரனோடு  ஏற்படும் சண்டையால் லட்சுமிக்கு வீட்டின் நிலைமை தலைகீழாக மாறிவிடும்.

இது பெண்களின் வாழ்வில் சொல்லப்படாத உண்மை எனவும் கூறலாம். மேலும் அதில் வரும் கண்ணம்மா கதாபாத்திரமும் மிக வலிமையான பாத்திரம். அடுத்து "சகலகலா சம்மந்தி" தன் மகளின் புகுந்த வீட்டு உறவான சரண்யா ஒரு கைம்பெண். இளம் வயதுலயே கணவனை இழந்து வாழ்க்கையை ஒரு அறையிலே நகர்த்தி கொண்டு இருப்பார்.  நாரதர் கலகம் போல ஒரு கலகம் செய்து அவர் வீட்டு சொந்தங்களை வைத்தே அவர் வாழ்க்கைக்கு ஒளி ஏற்றி வைப்பார்.

இவை மகளிர் தினம் என்றவுடன் ஒரு ரசிகையாக நான் பகிர நினைத்தக் காட்சிகள். இது போன்று விசு அவர்களின் படங்கள் பல வாழ்க்கையின் முக்கிய அம்சங்களை எளிமையாக, நகைச்சுவை கலந்து, சரமாரியாக விலாசும் வசனங்களைக் கொண்டு அற்புதமான படைப்பாக இருக்கும். இக்கட்டுரையின் நோக்கம் படம் பார்த்தவர்களுக்கு மீண்டும் நினைவூட்டி ரசிப்பதற்கும் பாராதவர்களுக்கு அறிமுகப்படுத்தி நாம் மகிழ்வதற்கும்.

நன்றி!!!

–

இரா. ரம்யபாரதி.

# விடியும் என்று நினைத்தவர்கள்

வாயில் விழுந்தது
ஒருபிடி கவளமண்.

கங்கையில் பிணம்
மிதந்தாலென்ன?
ஆக்ஸிஜன் கிடைக்காமல்
செத்து மடிந்தாலென்ன?

காவிப் பூஞ்சை
மாட்டு மூத்திர நாக்கில் அல்ல
மதவெறி செறிவூட்டப்பட்ட
மூளையில் அல்லவா படர்ந்து விட்டது...

நூலிபான்கள் இல்லாத இடமேது
இங்கு!

கட்டிக் காத்த
பரம்பரை சொத்தை
விற்று ஏப்பமிடும்
ஒன்றுக்கும் உதவாத ஊதாரிகளால்
நாசமாகும் நாட்டில்
நானும் நீயும்
பிடி மண்ணிற்காகவும்
சொட்டு தண்ணீருக்காகவும்
இன்னும் யுத்தம் செய்து
கொண்டிருக்கிறோம்...

கார்ப்பரேட்டுகளின் கரத்தில்
ஊனமான மானுட நலமற்ற
காட்டாட்சி!

சுற்றிலும் நாசகார கும்பல்.

எப்போது வேண்டுமானாலும் கொட்டிச்
சாகடிக்கும் கதண்டுகளின் கெட்டியான
வலையில் சபிக்கப்பட்ட மனிதர்கள்.

இலையுண்ணும் தாமரையை
ஊரே வேடிக்கைப் பார்க்கிறது...

கோமாளி பாதி
கொடுங்கோலன் மீதியென
கழியும் பொழுதில் நித்தமும்
அழியும் மதிப்புமிகு பெருவாழ்வு!

ஒரு நல்ல
நீடித்த விடியலுக்காக
நரக வாழ்க்கையில்
கட்டுண்டுக் கிடக்கும் தோழனே
நம்மிடம் இழப்பதற்கு இனி
எதுவுமில்லை!

அடைவதற்கு
உன்னதமான ஓர் உலகம் இருக்கிறது.

எழுந்து வா!

–

அமுதாராம்,
மன்னார்குடி.

# ஆடுகளும் அம்சவள்ளி பாட்டியும்,

காலையில் கண் விழித்த
அம்சவள்ளி பாட்டியின் கண்ணில்
தெரிகிறது ஆட்டுப் புழுக்கையும்
ஆட்டுக்குட்டிகளும்,

ஆட்டுக்கொட்டகையில்
கட்டி வைத்த ஆடுகள்
வீட்டுத்திண்ணையில்
படுத்து தூங்குகின்றன
கழுத்தில் கட்டிய கயிறு
அறுக்கப்பட்டதால்,

திண்ணை முழுவதும் புழுக்கைகள்
புழுக்கைகளை துடைப்பத்தால்
கூட்டி பெருக்கி அள்ளி
குப்பையில் கொட்டுகிறாள்
அம்சவள்ளி பாட்டி,

இரவு செய்த
சோற்றில் நீரை ஊற்றி
கஞ்சித்தண்ணீயை
ஒவ்வொரு ஆட்டுக்கும்
தனித்தனியே
பசியாற்றுகிறாள்
அம்சவள்ளி பாட்டி,

மீந்த கஞ்சித்தண்ணீயை
தானும் இரண்டு
செம்பு குடித்துவிட்டு ஆடு மேய்க்க
புரப்படுகிறாள் அம்சவள்ளி பாட்டி
வெற்றிலை பாக்கு
வைத்த சுருக்கு பையோடு,

ஆடுகளும் ஆட்டுக்குட்டிகளும்
துள்ளிக் குதித்து ஓடுகின்றன
சாலையின் இருபுறமும் உள்ள
கோவை கொடியை
பதம் பார்ப்பதற்காக,

சைக்கிள், மாட்டுவண்டி,
இரு சக்கர வாகனங்கள்
உலாவும் சாலையில்
ஆட்டு மந்தை கூட்டங்களாக
கடந்து செல்கின்றன
மாலை நேரங்களில்.

ஆடுகளும் வாகனங்களும்
ஒலியை எழுப்புகின்றன
வீடு வந்து சேரும் வரையில்,

வயல் வெளிகளில் மேயும்
ஆடுகளின் மேல் ஊர்வலம்
வருகின்றன காக்கைகளும்
கொக்குகளும்,

கருப்பு ஆடுகளின்
முடிகள் வெள்ளை வெள்ளையாக
சாயம் பூசுகிறது கருப்பு
காகங்களின் எச்சங்கள்,

வயல் வரப்பு மேடுகளில் உள்ள
புல்தரைகளை நக்கும் கருப்பு
ஆடுகளின் முதுகில்
வெள்ளைத் தாமரை பூ பூக்கிறது
நாரைகளும்
கொக்குகளின் வருகையால்,

அம்சவள்ளி பாட்டியும்
ஆட்டுக்குட்டிகளும்
வீடு வந்து சேர்கின்றன

தழைகளையும்
புல்லையும்
குளத்து நீரை குடித்து
வயிறு வீங்கிய நிலையில்.....!!!!!

- ச.சக்தி,
அழகு பெருமாள் குப்பம்,
பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம்,
9791642986,

---

## போர்...!?

எந்நேரமும்
காத்திருந்தோம்
எல்லையில்....!

தீயவர்கள்
நாட்டை தீண்டாமல்
கவனித்திருந்தோம்....!

எல்லைச் சாமியாய்
நிலைத்திருந்தோம்
நாட்டின் அரணாக...!

குடும்பம் விட்டு
குழந்தைகள்
நினைவுகளை
சுமந்து.....!
தேசமே பெரிதென
ஓயாமல்
சுழன்றோம்....!?

பேராசைப் போர்
வெடித்தது இங்கே....!

என் ஒரு வயதுக் குழந்தை
ஓயாமல் தேடிடும்...!

கட்டிய மனைவி...
புதைத்திடுவாள்
கனவுகளை மிதித்து....!

விருட்சமாய் நினைத்திருந்த
பெற்றோரும்
பேதலித்து
கவலை கொள்வார்....!?

என்று முடியும்
இந்த பேராசைப்
போர்....!?

–
முனைவர் சா. சம்பத்



# ஒரு புத்தகம் வாங்குங்க...

அவசர அவசரமாக
அலுவலக வேலையை
முடித்துவிட்டு
தன் இரு சக்கர வாகனத்தில் விரைந்துச்
சென்று
துணிக்கடை ஒன்றின்
முன் வாகனத்தை
நிறுத்திவிட்டு, கடைக்குள் சென்ற
பூமிகாவை தடுத்து
நிறுத்தினான் சிறுவன்
ஒருவன்.
அக்கா.... புத்தகம் வாங்குங்க
அக்கா....என்றான்

வேகமாக நடந்துக்
கொண்டே....
வேண்டாம் பா
கடையை அடைப்பதற்குள்
என் மகன் பிறந்தநாளுக்கு
துணி எடுக்கணும்.
இந்த நேரத்துல நீ வேற
தொந்தரவு பண்ற
போ..போ...வழியை விடு
என்றாள் பூமிகா

இல்லைக்கா... ஒரே
ஒரு புத்தகம் வாங்குங்க
பத்து ரூபாய் தான்
அக்கா
இந்த புத்தகம் எல்லாம்
வித்துட்டுப் போனா தான்
எங்க வீட்டில சாப்பாடு
அதனால ஒரு புத்தகம்
வாங்குங்க அக்கா
என்று கெஞ்சினான்
சிறுவன்.

நீயெல்லாம் பள்ளிக்கு
போய் படிக்கிறத விட்டுட்டு
இந்த வேலை செய்யுறயே என்றாள்
பூமிகா.
யார் சொன்னது. நான்
நாலாவது படிக்கிறேன்.
சாயந்தர நேரம் தான்
இத விற்கிறதுக்கு வருவேன் என்றான்
சிறுவன்.
அப்போ... உங்கப்பா
என்றாள் பூமிகா.
சின்னதா ஒரு பெட்டிக்
கடை இருக்கு.அதுல
அப்பா இருக்காங்க.
அப்பாவுக்கு நடக்க
முடியாது. அவருக்கு
ஒரு கால் இல்லைக்கா...
கடைக்கு வருவோர்
எல்லாம் சிகரெட் தான்
வாங்கிப் பிடிக்கிறாங்க
ஆனால் புத்தகம் வாங்கி
யாரும் படிக்கிறதில்ல
அதனால் தான் அப்பா
இங்கேயே இந்த புத்தகம்
இருந்தால் வீணாகிப்
போயிடும். கடைக்கு
வந்து வாங்க முடியாதவங்களும்
இருப்பாங்க.
நீ போயி
வித்துட்டு வா என
சொல்லி அனுப்புனாரு...
ஆமா... இதெல்லாம்
கேட்டு நீங்க என்ன

பண்ணப்போறீங்க...
ஒரு புத்தகம் வாங்குங்க...ப்ளீஸ்
என்று கெஞ்சினான்
சிறுவன்.

அடடா...இவன் காரியத்துல
கண்ணாயிருப்பான்
போல தெரியுதே..என
முணுமுணுத்துக்கொண்டே
சரி சரி அந்த புத்தகத்தைக் கொடு
என வாங்கி பார்த்தவள்...
இந்த புத்தகம் எல்லாம்
ஏற்கனவே நான்
வாங்கி வைத்திருக்கேன்.
அதனால் வேண்டாம் பா
என்றாள் பூமிகா.

எத்தனை புத்தகம் இருந்தா
என்னக்கா....
இது என்ன கெட்டுப்போகுற
பொருளா? இந்த புத்தகம்
நிச்சயமா உங்க வீட்ல
இருக்காது
அதனால வாங்கிக்கோங்க
அக்கா என்றான் சிறுவன்.
சொன்னா நீ கேட்கவே
மாட்டியா என்றாள்
பூமிகா
ப்ளீஸ் அக்கா ஒரு
புத்தகம் வாங்குங்க
என்று கெஞ்சியவனிடம்
சரி உன்னைப் பார்த்தா
பாவமா இருக்கு.
எனக்கு புத்தகம் எல்லாம்
வேண்டாம்.
இந்தா இந்த பணத்தை
வைத்துக்கொள் என்றாள்
பூமிகா.

வேணாமக்கா...வேணாம்.
புத்தகம் வாங்காமல்
நான் பணம் வாங்க
மாட்டேன்.என் அப்பாவும் திட்டு
வாரு.என்னை
மன்னிச்சுடுங்க அக்கா
என்றவன்
இந்தாக்கா.... உங்கள்
மகன் பிறந்தநாள்
பரிசாக ஒரு புத்தகம்
வாங்கிக்கோங்க.
இதுக்கெல்லாம் பணம்
வேண்டாமக்கா என்ற
சிறுவனின் நேர்மையும்
நல்ல குணமும்
பூமிகாவை தலைகுனிய
செய்தது.

சிறுவன் கையிலிருந்த
எல்லா புத்தங்களையும்
பெற்றுக் கொண்ட
பூமிகா துணிக்கடைக்குச்
செல்லாமல்
வீட்டை நோக்கி
விரைந்தாள்
தன் மகனுக்கு
பிறந்தநாள் பரிசளிக்க.

- முற்றும்-

எழுத்தாளர்,
மு.ஜெரோஷா,
திருப்பூர்.

# தன்னிடமிருந்த

எல்லா பணத்தையும்
செலவு செய்தவன்
மிச்சம் வைத்திருக்கிறான்...
பசியை!

**

பசியால்
இறந்து போன யாசகன்
இறுதி வரை
காப்பாற்ற முடியவில்லை...
மனிதத்தை!

**

தற்காலிகமாக
நிறுத்தப்படுகிறது...
போர்,
எத்தனை இலட்சம் அப்பாவி
மக்களை
கொன்று குவித்தோம் என்பதை
அறிந்து கொண்டு,
இன்னும் எத்தனை இலட்சம்
பேரை கொல்ல வேண்டுமென்ற
தீர்மானத்தோடு!
**

குழந்தைகள்
விளையாடும் இரயில் விளையாட்டு,
விரும்பி
சேர்ந்து கொள்கிறார்...
புகைவண்டி ஓட்டுநர்!

**

மனிதர்களை
கைவிட்டாலும்
கடவுளை கைவிடுவதில்லை...
மதக்குறியீடுகளை சுமக்கும்
மனிதர்கள்!

**

என்னை எனக்கு பிடிக்காத நாளில்
பறக்கும் முத்தமொன்றை
வீசிச் செல்கிறாள்...
பெயர்தெரியாத சிறுமி!

**

வரமென்பது
வேறொன்றுமில்லை ...
நம் வாழ்க்கையை
நாம் ரசித்து வாழ்வதே!

**

பார்வையற்ற பெண்ணுக்கு
உதவாமல் கடந்து போவோர்களை
விரக்தியோடு பார்க்கின்றன...
வானத்தின் ஆயிரம் கண்கள்!

**

ரத்தம் குடிக்க காத்திருக்கும்
மனிதர்களுக்கு நடுவே
ரத்தம் கொடுக்கும் மனிதர்களும்
இருக்கிறார்கள்...
வலிகளை புன்னகையில் மறைத்துக்
கொண்டே!

**

தூரமாய்
பார்த்துபழகிய விமானங்களை
முதன் முறையாய்
அருகில் பார்க்கிறேன்...
என் வீட்டருகே
குண்டுகளை வீசி விட்டு
இப்போது தான் கடந்து போயின!

–

மு.முபாரக்
+91 8072600090





சாதனா பரந்தாமன்
விருதை.

பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
டணாணாணீ://ட்ச்டிணணாடச்ணூடுச்டூ.ட்ச்ணணச்டி.டிண

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில்).

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு.

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்.

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது.

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு.

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்.

சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்

பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்.

நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி.

குழாய் பதிக்கும் பணி.

விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு.

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு.

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal

ThiravukolMagazine